




விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 57 குரோதி வருடம் மார்கழி மாதம்
12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை; ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 25 (27.12.2024)

முல்லைத்தீவு சுனாமி நினைவாலயம்



## சுனாமி நினைவேந்தல்: மக்கள் கதறி அழுது அஞ்சலி


கல்முனையில்...


முல்லைத்தீவு கள்ளப்பாடு...


யாழ் உடுத்துறை...

### கிளிநொச்சி அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் காரசாரம் :

# இராணுவ வெற்றி சின்னத்தை அகற்ற ஸ்ரீதரன் வலியுறுத்தல்

**இராணுவத்திடமுள்ள காணிகளை உடன் விடுவிக்க கோரிக்கை**

கிளிநொச்சி நகரில் அமைத்துள்ள இராணுவ நினைவுச் சின்னத்தை அகற்றி கலாசார மண்டபம் கட்ட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் வேண்டுகோள் விடுத்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசிய ஸ்ரீதரன் எம்பி, இராணுவத்தினர் வசம் உள்ள காணிகள் தொடர்பில் காரசாரமான கருத்துக்களை முன் வைத்தார். இதன் போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

" கிளிநொச்சி நகரில் பெரும்பகுதி காணிகளை இராணுவம் வைத்துள்ளது. இலங்கையிலேயே கச்சேரி காணியில் இராணுவம் இருப்பது கிளிநொச்சி கச்சேரியாகத்தான் இருக்கும்."

02 →



## அரசின் பொருளாதார செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுப்பு

- கடன் மறுசீரமைப்பு நிறைவு
- சிறு மற்றும் மத்திய தர தொழில் முனைவோருக்கு பல சலுகைகள்
- குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு பாதுகாப்பு

பொருளாதார நிலைப்படுத்தல் செயற்பாடுகள் மற்றும் மக்களுக்கான உத்தேச நிவாரணப் பொதிகள் தொடர்பிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (26) நடைபெற்றது.

02 →


தொழில் அமைச்சர், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் - கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ
பிரதி நிதி அமைச்சர் - ஹர்ஷன சூரியப்பெரும

## முட்டை விலை வீழ்ச்சி; உணவுசார் விலையில் மாற்றமில்லை

**கனூஷியா புஷ்பகுமார்**



முட்டை விலை சடுதியாக குறைவடைந்தாலும் முட்டை ரொட்டி, முட்டை அப்பம் ஆகியவற்றின் விலை குறையாமல் இருப்பது தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.

கடந்த நாட்களில் முட்டை ஒன்றின் விலை

02 →

## இடமாற்றங்கள் தொடர்பில் ஆராய ஐ.ம.ச விஷேட குழு

**கனூஷியா புஷ்பகுமார்**

அரசாங்க மட்டத்திலும், மாகாண சபை மட்டத்திலும் இடம்பெறும் தன்னிச்சையான இடமாற்றங்கள் தொடர்பில் ஆராய விசேட பிரிவொன்றை நிறுவுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்காக,பெயர் குறிப்பிட்டு அல்லது குறிப்பிடாது தகவல்களை வழங்கும் அனைவருக்கும் வாய்ப்புகள் வழங்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

02 →

## அரிசி இறக்குமதியை தவிர்த்து காலம் தாழ்த்தும் அரசாங்கம்!

**கனூஷியா புஷ்பகுமார்**



நாடளாவிய ரீதியில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருந்தாலும், அரசாங்கம் இதுவரையில் சிறிதளவு அரிசியை கூட இறக்குமதி செய்யவில்லை என சுங்கத் திணைக்களத்தின் தகவல் அறியும் வட்டாரங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனம் மற்றும் சதொச ஆகியவை அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்த போதிலும், சதொச மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இரண்டு டெண்டர்களிலும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், இதுவரை அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் தவறியுள்ளதாக சுங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தனியார் இறக்குமதியாளர்கள் 28,500 மெற்றிக் டொன் பச்சை அரிசி மற்றும் 38,500 மெற்றிக் டொன் நாட்டு அரிசித் தொகை எனும் அடிப்படையில் 67,000 மெற்றிக் டொன் அரிசி நேற்று முன்தினம் (25) வரையில் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

02 →

## அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் வாய் பொத்தச் சொன்ன மருத்துவர் அர்ச்சுனா



கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றையதினம் நடைபெற்றபோது இலங்கை பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனாவுக்குமிடையே கருத்து மோதல் ஏற்பட்டது.

இதன்போது சகாதேவன் அர்ச்சுனாவை பார்த்து, பாராளுமன்ற உறுப்பினர் போல இல்லாமல் நீங்கள் ஏன் பைத்தியக்காரத்தனமாக பேசுகின்றீர்கள் என்று கூறினார். அதற்கு பதிலாக shut up (வாயை மூடுங்கள்) என்று அர்ச்சுனா கூறினார்.

02 →

## 'சுனாமி பேபி-81' அபிலாஷ் வீட்டில் நினைவஞ்சலி

**கனகராசா சரவணன்**





கல்முனை பாண்டிருப்பில் சுனாமியின் போது கண்டெக்கப்பட்ட "சுனாமி பேபி-81" என்றழைக்கப்படும் அபிலாஷ் மட்டக்களப்பு குருக்கள் மடத்திலுள்ள அவரது வீட்டில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் தூபியில் நேற்று வியாழக்கிழமை

02 →

## பிரதமர் ஹரிணிக்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனு தாக்கல்

**ஆர்.மனோசங்கர்**



பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

றுஹுணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேன இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

றுஹுணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.இந்த மனுவில், அரசியல் தேவை காரணமாகவே தான் பதவி நீக்கம் செய்யப்பட்டதாக

02 →

## கிழக்கில் 52 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்; தமிழ் மொழியில்- 50; சிங்கள மொழி மூலம் -02

**எஸ்.கீதபொன்கலன்**



கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, அம்பாறை,மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள மாகாணப் பாடசாலைகளில் கடமைபுரிவதற்கு நேற்று(26) 52 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டது. கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்தன சேகர திருகோணமலையில்

02 →

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## கிளிநொச்சியில் இராணுவ...

"நாங்கள் கூட்டம் நடத்திக் கொண்டு இருக்கும் இந்த கச்சேரி காணியில் பெரும்பகுதியை இராணுவம் வைத்திருக்கிறது. இவ்வாறு பல காணிகளை இராணுவம் வைத்திருக்கிறது.

"கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்துக்கு செல்லும் பிரதான வீதியை இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ளது. அதனை விடுமாறு கடந்த காலங்களிலும் பேசினோம். இன்றுவரை விடுவிக்கப்படவில்லை."

"கிளிநொச்சி டிப்போ சந்தியில் உள்ள இராணுவ வெற்றி சின்னத்தை அகற்றி கலாசார மண்டபத்தை அமையுங்கள். தற்போது பஸ் நிலையம் அமைத்துள்ள பகுதியில் அமைச்சர் ஒருவரின் நிதி ஒதுக்கீட்டில் மிகப்பெரிய கலாசார மண்டபம் அமைந்திருந்தது."

குறித்த மண்டபம் யுத்தத்தின் போது இடிக்கப்பட்டது. அவ்வாறான மண்டபம் ஒன்றை குறித்த இடத்தில் அமையுங்கள். கலாசார மண்டபம் ஒன்று எமது மாவட்டத்துக்கு தேவை. அந்த இடம் பொருத்தமான இடமுமாகும்." என்றார்.

இந்தக் கூட்டத்தில் தொடர்ந்து கருத்து தெரிவித்த ஸ்ரீதரன் எம்பி

யுத்த சத்தங்கள் இல்லை. குண்டு சத்தங்கள் இல்லை. இப்போதும் இராணுவம் இந்த பகுதிகளில் தேவையா? இராணுவத்தினரை வெளியேற சொல்லுங்கள் எனவும் ஸ்ரீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மகாவித்தியாலய காணி தொடர்பாக இராணுவம் குறிப்பிட்டீட் விடயம் தொடர்பிலும் தெரிவிக்கப்பட்டது, குறித்த பாடசாலையின் விளையாட்டு மைதானத்துக்கு செல்லும் வீதியை திறந்து விட்டால் குறித்த முகாம் இரண்டாக பிரியும். இதனால் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என கூறப்பட்டதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் ஏற்கனவே முன்னெடுப்புக்கள் நடந்துள்ள நிலையில் இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு செயலாளருடன் தான் பேசுவதாகவும், தீர்வு காண்பதாகவும் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

## முட்டை விலை வீழ்ச்சி; ....

58 ரூபாய் தொடக்கம் 60 ரூபாயாக காணப்பட்ட போது, முட்டை ரொட்டி மற்றும் முட்டை அப்பம் ஆகியவற்றின் விலை 130 தொடக்கம் 140 ரூபாயாக அதிகரித்தது.

தற்போது முட்டையின் விலை 30 முதல் 32 ரூபாய் வரை குறைந்துள்ளது.எனினும்,முட்டை ரொட்டி மற்றும் முட்டை அப்பத்தின் விலை முன்பு போலவே உள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

## இடமாற்றங்கள்...

அரசாங்க மற்றும் மாகாண சபை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து தன்னிச்சையான இடமாற்றங்களையும் இடைநிறுத்துமாறு அரசாங்கத்திடமும் மாகாண சபை அதிகாரிகளிடமும் வலியுறுத்துகிறோம் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் குறித்த அறிக்கையில், "அரசாங்க மற்றும் மாகாண சபைகளின் பல பகுதிகளில் பணியாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமற்ற அடிப்படையில் சேவை பதவிகளை மாற்றுவதற்கான திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது.

இதனால் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், உள்ளூராட்சி செயலாளர்கள், கூட்டுறவு உதவி அபிவிருத்தி ஆணையாளர் போன்ற ஊழியர்கள் மற்றும் கள உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச சேவையின் சுதந்திரத்தை நிலைநாட்டுவோம் என வாக்குறுதியளித்து பதவிக்கு வந்த அரசாங்கம் இவ்வாறு செயற்படுவது பிரச்சினைக்குரிய விடயமாகும்.இன்னும் முடிவடையாத, விரைவில் நடைபெற உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் மற்றும் இந்த நாட்களில் கூட்டுறவு சங்க தேர்தலும் நடைபெறவுள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் அரச சேவையில் துரித அரசியல் மயமாக்கல் இடம்பெற்று வருவதும், எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு அரசாங்கம் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதையும் தெளிவாக காண முடிகிறது.

இந்த இடமாற்றங்களில், அந்தந்த துறைகளில் பணியாற்றும் பணிகளில் சிக்கல் நிலை ஏற்படுவது மட்டுமின்றி, அதிகாரிகளும் தனிப்பட்ட ரீதியில் பல பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளதாக தெரிகிறது." என குறிப்பிடப்பட்டுள்ளது.

## 'சுனாமி பேபி-81'

(26) காலை 9.05 மணிக்கு குடும்பத்துடன் சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினார்.

கடந்த 2004ம் ஆண்டு கல்முனை பாண்டிருப்பு கடற்கரை பகுதியை அண்டிய பகுதியில் உள்ள வீட்டில் அபிலாஷ் இரண்டு மாத குழந்தையாக தாயாருடன் இருந்தபோது ஏற்பட்ட சுனாமியினால் கடல் அலையில் அடித்துச்செல்லப்பட்டு அந்த பகுதியிலுள்ள காணி ஒன்றில் தெய்வாதீனமாக உயிர் தப்பி கூடை ஒன்றில் இருந்த நிலையில் மீட்கப்பட்டார். அவரை வைத்தியசாலை ஒன்றில் கடமையாற்றிவந்த தாதியர் ஒருவர் எடுத்துச் சென்று தனது பிள்ளை என சொந்தம் கொண்டாடினார்.

இந்த நிலையில் அபிலாஷின் பொற்றேர் அது தனது குழந்தை என போராடி சட்டத்தை நாடியதையடுத்து நீதிமன்றம் குழந்தையின் பெற்றோரை உறுதிபடுத்துவதற்காக இலங்கையில் முதல் முதலாக டி.என்.ஏ. பிசோதனை மூலம் 52 நாட்களின் பின்னர் அபிலாஷ் உண்மையான பெற்றோரை கண்டறிந்து அவர்களிடம் அபிலாஷ் ஒப்படைக்கப்பட்டார்.

சுனாமியால் உயிரிழந்த அனைவரது நினைவாக அபிலாஷ் தனது வீட்டில் நினைவு தூபி ஒன்றை அமைத்து வருடாவருடம் அஞ்சலி செலுத்தி வருகிறார். நேற்றும் சுனாமி ஏற்பட்டு 20 வருட நினைவு தினத்தையிட்டு அபிலாஷ் அவரது தாய், தந்தை மற்றும் சகோதரியுடன் நினைவு தூபியின் முன்னால் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்.

## அரிசி இறக்குமதியை

மேலும், அரிசி இறக்குமதிக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அபிவிருத்தி குழு கூட்டத்தில்

இதன்போது குறிக்கிட்ட தம்பிராசா, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர். Shut up என்று எல்லாம் கூற முடியாது. இங்கே அதிகாரிகள் தான் உள்ளார்கள் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கதைக்கும் போது கதைப்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கின்றது என்றா நீங்கள் நினைத்துக்கொண்டு இருக்கின்றீர்கள்? என்றுவிட்டு தம்பிராசாவை பார்த்து "can you shut up" (உங்களது வாயை மூட முடியுமா?) என்றார்.

அத்துடன் சகாதேவனை பார்த்து "உங்களுடன் திருப்பி கதைத்ததற்காக ஒரு நாளில் 8 அல்லது 10 பேரை இடமாற்றம் செய்துள்ளீர்கள். இதனை உங்களது கட்சியோடு வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட தம்பிராசா, ஒரு அரச அதிகாரியை பொது வெளியில் வைத்து அவமானப்படுத்த கூடாது. இடமாற்றம் பெற்றவர்கள் வேண்டும் என்றால் அமைச்சுக்கு முறையிடலாம் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அர்ச்சுனா "நீங்கள் எந்த கட்சி? உங்களுக்கு கிடைக்கவில்லைதானே nomination ஆகையால் அடுத்த முறை முயற்சியுங்கள். தயவு செய்து தம்பிராசாவை வெளியே அகற்றுங்கள். ஒரு பொம்பிளை பிள்ளையை பற்றி முகநூலில் எவ்வளவு எழுதுகின்றீர்கள். வெளியே போம் என்றார்.

அதற்கு பதிலளித்த தம்பிராசா "நீ இரவு பகலாக ஒரு பொம்பிளையை கொண்டு திரிகிறாய் என்றார்.

அதற்கு பதிலளித்த அர்ச்சனா "நான் ஒன்றைத்தான் கொண்டு திரிகிறேன். நீங்கள் எத்தனையை கொண்டுபோய் வெளிநாடுகளில் கொடுத்தீர்கள் என்று எங்களுக்கு தெரியும். எதற்காக இவரை அழைக்கின்றீர்கள். இவர் ஒரு அழையா நபர் ஆகையால் வெளியே செல்லுங்கள். அமைச்சர் அவர்களே ஓர் அழையா நபரை உள்ளே விட்டு ஏன் பிரச்சினையை உருவாக்குகின்றீர்கள். இவர் யார்? என்ன அடிப்படையில் உள்ளே வந்தார் என்றார்.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில் இனிமேல் பொதுமக்களுக்கோ ஊடகங்களுக்கோ அனுமதி இல்லை. பொதுமக்கள் முறையிடவேண்டுமாக இருந்தால் நாங்கள் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தில் உள்ளோம், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளார்கள், அவர்களிடம் முறையிடுங்கள் என்றார்.

## கிழக்கில் 52 பட்டதாரிகளுக்கு...

வைத்து இந்நியமன பத்திரங்களை வழங்கினார்.

நியமிக்கப்படும் பாடசாலையில் கட்டாயம் 5 வருடங்கள் சேவையாற்ற வேண்டும்,முதல் நியமனப் பாடசாலையில் உச்ச பட்சம் 8 வருடம் சேவையாற்றிய பின்னர் கட்டாயம் அடுத்த பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்படும், இது மாகாண நியமனம் எனவே மாவட்டத்தின் மூன்று மாவட்டங்களுக்குள்ளும் இடமாற்றம் வழங்கப்படும் என்ற நிபந்தனைகளுடன் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் வழங்கப்பட்ட 52 பேரில் 50 பேர் தமிழ் மொழி மூலப்பட்டதாரிகள் என்பதுடன்,2 பேர் சிங்கள மொழி மூல பட்டதாரிகள் ஆவர்.

## பிரதமர் ஹரிணிக்கு...

அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துணைவேந்தர் பதவிக்கு தகுதியான அதிகாரியை நியமிப்பதில் நடைமுறை மீறப்பட்டுள்ளதாகவும், இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்றும் அவர் கூறுகிறார். இதற்கு கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹறிணி அமரசூரிய, உயர்கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆகியோர் பொறுப்புக்கூற வேண்டும்" என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசின் பொருளாதார

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோர் இந்த ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை பொருளாதார ஸ்திரப்படுத்தல் செயல்முறை மற்றும் மக்களுக்கான நிவாரணப் பொதிகள் தொடர்பான ஊடக அறிக்கை

01.பொருளாதார ஸ்திரத்தன்மை

முன்னைய ஆட்சிகள் உருவாக்கிய படுகுழியில் இருந்து நாட்டை மீட்டெடுக்க, பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது முக்கியமானது.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்த வேளையில், நெருக்கடிக்கு காரணமாக இருந்தவர்கள் 2022 ஏப்ரலில் ஒருதலைப்பட்சமாக வெளிநாட்டுக் கடன் பெறுவதை நிறுத்தியிருந்ததுடன், 4 வருட காலத்திற்குள் 8 தவணைகளாக கிடைக்கப்பெறவிருந்த 3 பில்லியன் டொலர்கள் வரையிலான நீடிக்கப்பட்ட கடன் வசதிகளுக்கான (EFF) சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தில் நுழைந்திருந்தனர்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடன் ஆகியவை நிலைத்தன்மை பகுப்பாய்விற்கு ஏற்ப மறுசீரமைப்பு செயல்முறை மூலம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் தாமதிப்பு மற்றும் கடினமான தன்மை காரணமாக, நாடு மேலதிகச் செலவுகளைச் செய்ய வேண்டியிருந்ததுடன் மக்கள் மீதான அதிக சுமை அதிகபடுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், பின்னர், சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரக் கண்ணோட்டத்திற்கு அமைய, அப்போதைய நிலைமைகளின் நன்மை, தீமைகள் என்ற இரண்டையும் கருத்தில் கொண்டு, நாட்டு மக்களின் நலனுக்கான மாற்றீடுகளுடன் அரசாங்கம் முன்னோக்கி பயணிக்கிறது.

அதன்படி, வேலைத்திட்டத்தின் அளவுகோள் மற்றும் அரச வருமான வழிமுறைகளுக்கு அமைய, உரிய தலையீடு மற்றும் காலோசிதமான முறையில் வசதிகளை வழங்குவதன் ஊடாக, 2024 நவம்பர் 26 ஆம் திகதி மூன்றாவது மீளாய்வில் பணிக்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டினை எட்ட முடிந்தது. சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் சபை அனுமதிக்கு முன்னதாக, நுகரு இன் அடுத்த தவணையைப் பெற்றுகொள்வதற்கு அரசாங்கம் உரிய பங்குதாரர்களுடன் இணைந்து செயலாற்றி வருகிறது.

### கடன் மறுசீரமைப்பு

இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மறுசீரமைப்பை உள்ளடக்கியுள்ளது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு 2023 ஜூலை மாதமளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பில் உள்ளடங்கும் பலதரப்பு கடன் மறுசீரமைப்பு பல்வேறு அடிப்படைகள் மற்றும் தர்க்கங்களுக்கு அமைய கடன் வழங்குநர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் மற்றும் தனியார் சர்வதேச பிணைமுறிகள் (ISB) என்பன வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பில் உள்ளடங்கும்.

### இருதரப்புக் கடன்

17 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரான்ஸ், இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணைத் தலைமைத்துவம் வகிக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு (OCC), சீனா எக்ஸிம் வங்கி, சீனா அபிவிருத்தி வங்கி, ஏனைய உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களான (குவைட், சவூதி அரேபியா, ஈரான், பாகிஸ்தான்) மற்றும் ஏனைய வணிக கடன் வழங்குநர்களுடன் இணைந்து இருதரப்பு கடன் தொடர்பிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு 2024 ஜூன் மாதத்தில் உரிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், குறித்த தீர்வுகளின் (CoT) ஒப்பீட்டு நிலையை உறுதிசெய்து, இணக்கம் காணப்பட்ட கட்டமைப்பிற்குள் சீனாவுடனான கடன் 2023 ஒக்டோபர் மாதத்திற்குள் மறுசீரமைக்கப்பட்டிருந்தது. ஏனைய உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களான (குவைட், சவூதி அரேபியா, ஈரான், பாகிஸ்தான்) உள்ளிட்ட நாடுகளுடனான கடன் அண்ணளவாக 300 டொலர் மில்லியன்களாக காணப்படுவதுடன், இது ஏனைய முழுக் கடன் மறுசீரமைப்பு செயல்லில்1% ஆக காணப்படுகிறது. ஏனைய அனைத்து இருதரப்பு கடன் வழங்குநர்களும் இணங்கிய கட்டமைப்புக்குள் மறுசீரைப்புச் செய்ய தற்போதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச பிணைமுறி கடன் வழங்குநர்கள் மிகவும் தாமதமான சர்வதேச பிணைமுறி கடன், மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள், இணக்கமின்மை, முன்மொழிவுகளை மாற்றுதல், நுனுபு மற்றும் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கைகளுக்கு இசைவாக மாற்றுதல் உள்ளிட்ட பல கட்ட பேச்சுவார்த்தைகளைக் கடந்துள்ளது.

இறுதியாக 2024 செப்டம்பர் 19 ஆம் திகதி கொள்கை அடிப்படையில் (AIP) ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் இணக்கம் காணப்பட்டது. Ad Hoc Group (AHG) மற்றும் Local banking consortium இனால் கடந்த காலங்களில் செலுத்த வேண்டியிருந்த 1.7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் உட்பட சர்வதேச பிணைமுறிக் கடன்களில் 14.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுகிறது.

காலோசிதமான செயற்பாடுகளை முன்னெடுத்தல் மற்றும் புதிய வசதிகளை ஏற்படுத்துவதன் ஊடாக புதிய அரசாங்கம் நாட்டை பொருளாதார ஸ்திரத்தன்மையை நோக்கி நகர்த்துவதற்கான வலுவான அரசியல் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. நிதி ஸ்திரத்தன்மைக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சுயாதீனமான மூன்றாம் தரப்பினரால் பாராட்டப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப தரப்படுத்தல்களும் உயர்த்தப்பட்டுள்ளன.

## யாழில் எலிக் காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டுக்குள்

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி பகுதிகளில் அண்மைக்காலமாக ஏற்பட்டிருந்த எலிக் காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தற்பொழுது,காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை சடுதியாக குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், தடுப்பு மருந்து வழங்கும் நடவடிக்கையும் மிக தீவிரமாக மேற்கொள்ளப்பட்டதால் இந்த எலிக் காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த வெற்றிக்காக சரியான முறையில் வழங்கப்பட்ட முன்னுரிமை மற்றும் பொருளாதார ஸ்திரப்படுத்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட பயனுள்ள நடவடிக்கைகள் ஆகியன முக்கிய காரணங்களாகியுள்ளன. இவ்வாறாக, இலங்கை மக்களுக்கு "வளமான நடு - அழகான வாழ்வு" இனை ஏற்படுத்திக்கொடுப்பதை நனவாக்க அரசாங்கம் தனது மறுசீரமைப்புச் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து. இதன்படி, பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான தீர்மானமிக்க முயற்சியாக 2024 டிசம்பர் 20 ஆம் திகதி நடைமுறையில் உள்ள பிணைமுறி பரிமாற்றத்திற்காக புதிய பிணைமுறிகளை வெளியிடுவதை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதுடன், அதனை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

2. சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கான வசதிகளை வழங்கல்

2.அ.1. பராட்டே சட்ட சலுகைகளை நீடித்தல்

பராட்டே சட்டத்தை நடைமுறைப்படுத்தும் திகதியை ஒத்திவைப்பதற்குப் பதிலாக, நீண்டகாலமாக காணப்படும் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகள் காணப்படுவதை உறுதிசெய்ய, அரசாங்கம் பங்குதாரர் குழுக்களுடன் இணைந்துகொண்டுள்ளது. இதன் பலனாக, பராட்டே சட்டத்தின் அமுலாக்கம் இப்போது 2025 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

2.ஆ.2.நிவாரணப் பொதி

கால நீடிப்பினால் மாத்திரம் வியாபாரங்களுக்கு நிவாரணம் வழங்கவில்லை. மத்திய வங்கியின் தரவுகளின்படி, 25 மில்லியனுக்கும் குறைவான கடன் மூலதனத்தைக் கொண்ட கடனாளர்களில் 99% ஆனோர் வங்கிகளுடன் கலந்தாலோசித்து தங்களது கடன்களை

செலுத்தும் முறைக்கு இணங்க 12 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. 25 - 50 மில்லியன்கள் வரையிலான கடன்கள் கொடுக்கல் வாங்கல் செய்தோருக்கும் 9 மாதங்கள் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளதுடன், ஏனை கொடுக்கல் வாங்கல் செயற்பாட்டாளர்களுக்கும் 6 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட மற்றும் மத்திய வங்கியினால் செயற்படுத்தப்படும் இந்த நிவாரணப் பொதியில், குறிப்பாக குறைந்த வட்டி விகிதங்கள், மீள் செலுத்தும் காலம் நீடிப்பு, கடன் தரப்படுத்தலில் தளர்வு மற்றும் மதிப்பீட்டு சர்ச்சைகளை தீர்ப்பதற்கு வெளிப்படையான பொறிமுறையை ஏற்படுத்துவதன் மூலம் கடன் பெறுபவர்களுக்கு பெருமளவில் நிவாரணம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நிவாரண நடவடிக்கைகள், பொருளாதாரத்தில் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்பை உறுதி செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்படுகிறது.

2. ஆ. பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொள்ள உதவி

2.ஆ.1. அஸ்வெசும குடும்ப பிள்ளைகள்.

சமூகத்தில் ஆபத்திற்குட்படக்கூடிய தொகுதியிலிருக்கும் பெற்றோர்களுடைய பிள்ளைகளின் கல்வி மீதான சுமையை குறைக்கும் வகையில் எதிர்வரும் பாடசாலை தவணைக்கு அத்தியாவசியமான பாடசாலை புத்தகங்கள் மற்றும் எழுதுவினைபொருட்கள் கொள்வனவு செய்வதற்கு ஒரு பிள்ளைக்கு 6,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அஸ்வெசும பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்காக இந்த சலுகை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

2.ஆ.2. அஸ்வெசு பெறாத குடும்பங்களின் பிள்ளைகள்

தற்போது அஸ்வெசும கிடைக்காத, ஆனால், நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி அமைச்சின் பரிந்துரைக்கமைய இந்த சலுகை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டினை விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதோடு, பொருளாதார ரீதியாக நெருக்கடிகளை எதிர்நோக்குகின்ற மற்றும் இந்த உதவித் தொகையினை பெற்றுக்கொள்ள தகுதியான சகல பிள்ளைகளுக்கும் இந்த சலுகையை வழங்கும் வேலைத்திட்டம் இன்னும் சில தினங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

# வாகனங்களுக்கு விதிக்கப்படும் புதிய வரி தொடர்பில் அரசு தீர்மானிக்கவில்லை



### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு விதிக்கப்படும் புதிய வரி தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையை நிதியமைச்சு எதிர்வரும் காலங்களில் வெளியிடும் எனவும் தெரிவித்தார்.

தனியார் வாகனங்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான அரசாங்கத்தின் முடிவைத் தொடர்ந்து, வாகன இறக்குமதியாளர்களின் ஆர்வம் அதிகரித்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

சந்தை தேவையை பூர்த்தி செய்ய ஜப்பானில் இருந்து ஏழு ஆண்டுகள் வரை பழமையான ஹைபிரிட் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு இறக்குமதியாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். எவ்வாறாயினும், இந்த பிரேரணை அண்மையில் கூடிய அமைச்சரவையில் கலந்துரையாடப்படவில்லை என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விளக்கமளித்துள்ளார்.

வாகன இறக்குமதியாளர்களுடன் கலந்தாலோசித்து நிதி அமைச்சினால் முறையான முன்மொழிவு முன்வைக்கப்பட்டால் மாத்திரமே இவ்வாறான முன்மொழிவுகளை பரிசீலிக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவது பரந்த அளவிலான விவாதத்தைத் தூண்டியுள்ளது, வாகனங்களின் மலிவு மற்றும் புதிய வரியின் தாக்கங்கள் கலந்துரையாடலில் ஆதிக்கம் செலுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பண்டிகைக் காலங்களில் கொழும்பில் 600 டொன் குப்பைகள் சேகரிப்பு

(கஜனாஷியா புஷ்பகுமார்)

பண்டிகைக் காலங்களில் கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் நாளாந்தம் 600 டொன் குப்பைகள் சேகரிக்கப்படுவதாக குறித்த மாநகர சபை ஆணையாளர் பாலித நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் நகரில் சேகரிக்கப்படும் குப்பைகளின் அளவு அதிகரித்து வருவதாகவும், நாளொன்றுக்கு சராசரியாக 500 டொன் குப்பைகள் சேகரிக்கப்படுவதாகவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், டிசம்பர் 31ஆம் திகதி இரவு, காலி முகத்திடல் மைதானத்தில் ஒன்று கூடுபவர்கள் விட்டுச் செல்லும் குப்பைகளை அகற்ற சுமார் 150 தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

தொழிலாளர்கள் விடியும் வரை குப்பைகளை அகற்றிவிட்டு மறுநாள் காலை 6:00 மணிக்குள் கொழும்பை அழகிய நகரமாக மாற்றுவார்கள் என அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த இடங்களில் சேரும் குப்பைகளை உரிய முறையில் தொட்டிகளில் போட வேண்டும் அல்லது அவற்றை எடுத்துச் செல்ல முன்வர வேண்டும் என அவர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு மாநகர சபையின் பொது சுகாதார பரிசோதகர்கள் கோட்டை பிரதேசத்தில் உள்ள உணவு விற்பனை நிலையங்களில் விசேட சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருவதாகவும், இந்த நாட்களில் சுற்றிவளைப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் மாநகரசபை ஆணையாளர் குறிப்பிட்டார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** இன்று வெற்றிகரமான நாள் என்பதால் இந்த நாளை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**ரிஷபம்** உங்கள் பணிகளை சுமூகமாக மேற்கொள்வீர்கள்.

**மிதுனம்** ஆன்மீகத்திற்கு நேரம் ஒதுக்குங்கள். அதன் மூலம் பிரச்சினைகள் தீரலாம்.

**கடகம்** இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும்.

**சிம்மம்** உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கன்னி** இன்று மகிழ்ச் சிகரமான நாளாக இருக்காது.

**துலாம்** பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

**விருச்சிகம்** இன்று யதார்த்த அணுகுமுறை மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

**தனுசு** தொடர் முயற்சியின் மூலம் இன்று அனைத்திலும் வெற்றி காணலாம்.

**மகரம்** இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

**கும்பம்** இன்று தேவையற்ற எண்ணங்களை தவிர்ப்பது நல்லது

**மீனம்** உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை உணர்வுகள் உங்களுக்கு கவலையையும் குழப்பத்தையும் உருவாக்கும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று அதிகாலை 01:00 வரை ஏகாதசி பின்பு துவாதசி.

**நட்சத்திரம்:** இன்று இரவு 09:04 வரை விசாகம் பின்பு அனுஷம்.

**யோகம்:** சித்த.

**சந்திராஷ்டமம்:** உத்திரட்டாதி,ரேவதி

**சூலம்:** மேற்கு.

**இராகு காலம்:** 10:30 AM முதல் 12:00 PM வரை.

**குளிகை:** 07:30 AM முதல் 09:00 AM வரை.

**எமகண்டம்:** 03:00 PM முதல் 04:30 PM வரை.



கல்முனை கடற்கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவுத்தூபியில் பொதுமக்கள் ஆழிப்பேரலையில் உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைத்து நேற்று கண்ணீருடன் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள். (செ.துஜியந்தன்,சினாஷ்)

### திருக்கோவில் சங்கமன்கண்டி

# கடலில் நீராடச் சென்ற மூவர் அலையில் சிக்கி மாயம்

(கனகராசா சரவணன்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சங்கமன்கண்டி கடலில் நீராடச் சென்ற தந்தை, மகன் மற்றும் அவரது உறவினரான சிறுவன் உட்பட 3 பேர் கடல் அலை இழுத்துச் சென்று காணாமல் போயுள்ள சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை (25) மாலை 5.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சங்கமன்கண்டியைச் சேர்ந்த 38 வயதுடைய மயில்வாகனம் நந்தராஜ், அவருடைய 15 வயதுடைய மகன் டினுஜன், மற்றும் நந்தராஜின் சகோதரியின் மகனான 17 வயதுடைய கிரிஷோர் ஆகிய மூவரும் இவ்வாறு கடலில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மயில்வாகனம் நந்தராஜ் அவரது மகன் மற்றும் சகோதரியின் மகன் ஆகிய மூவரும் சம்பவ தினம் மாலையில் நத்தார் பண்டிகையையிட்டு கடலில் நீராடச் சென்ற போது அவரது மகன் மற்றும் மருமகன் இருவரும் கடல் அலையால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். இதையடுத்து அவர்களை காப்பாற்ற கடலில் குதித்த தந்தையையும் கடல் அலை இழுத்துச் சென்று காணாமல் போனதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை 2 மில்லியனை கடந்தது



இந்த வருடம் நாட்டுக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நேற்று (26)இரண்டு மில்லியனை கடந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.


தாய்லாந்திலிருந்து வந்த தம்பதியரால் அந்த இலக்கு நேற்று எட்டப்பட்டதாக இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இம்மாதம் இந்தியாவில் இருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதுடன், அதன் தொகை 35,131 ஆகும். அடுத்தபடியாக ரஷ்யாவிலிருந்து 22,637 சுற்றுலாப் பயணிகளும், இங்கிலாந்திலிருந்து 12,822 பயணிகளும், ஜெர்மனியில் இருந்து 9,998 பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 8,646 பயணிகளும் டிசம்பர் மாதத்தில் இலங்கைக்கு சுற்றுலா வந்துள்ளனர்.

2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் சுமார் 2.1 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# பேராசிரியர் ஏ.எம். இஸ்ஹாக் காலமானார்

(சுலைமான் றாபி)



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் வேந்தரும் பேராசிரியருமான நிந்தவூரைச்சேர்ந்த ஏ.எம். இஸ்ஹாக், நேற்றைய தினம் (26) மக்காவில் காலமானார்.

தனது பேரப்பிள்ளைகள் சகிதம் மக்காவில் உம்ரா கடமைகளை நிறைவேற்ற அவர் சென்றிருந்தார்.

பேராசிரியர் இஸ்ஹாக், சவூதி அரேபியா தஹ்ரானில் உள்ள பெட்ரோலியம் மற்றும் கனிமங்கள் பல்கலைக்கழகத்தில் கடந்த காலங்களில் கடமையாற்றினார்.

நிந்தவூர் சகாத் நிதியத்தின் ஸ்தாபகரான இவர், பல பள்ளிவாசல்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காகவும், பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்காகவும் பல்வேறு வழிகளில் பெரும் பங்காற்றினார்.

அமெரிக்க குடியுரிமையைப் பெற்றுள்ள இவர், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தராகப் பணியாற்றிய காலத்தில் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்கினார். அத்துடன் பல்கலைக்கழக வளர்ச்சிக்காக அதன் நிர்வாகத்தை எப்போதும் ஆலோசனை வழங்கி தனது பங்களிப்பை வழங்கியவாராவார்.

மக்காவிலேயே அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### 13ஆவது திருத்தச்சட்டம்

# தமிழக கட்சிகள் மோடிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்



13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழக கட்சிகள் இந்திய பிரதமர் மோடியிடம் கோரிக்கை விடுக்க வேண்டும் என இணைந்த வடக்கு,கிழக்கு மாகாணங்களின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜ பெருமாள் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய பயணத்தில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடி எவ்வித கருத்துகளையும் முன்வைத்திருக்கவில்லை. இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வரதராஜ பெருமாள்,

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 2015ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்றிருந்த போதும், 2023ஆம் ஆண்டு சென்றிருந்த போதும் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறு பிரதமர் மோடி அழுத்தம் கொடுத்திருந்தார்.

ஆனால், இம்முறை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனான சந்திப்பில் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பேசப்பட்டதான செய்திகள் எதுவும் இல்லை. இது கவலையளிக்கிறது.

இலங்கையில் உள்ள தமிழ் கட்சிகளும், தமிழகத்தில் உள்ள கட்சிகளும் பிரதமர் மோடியிடம் 13ஐ அமுல்படுத்தும் அழுத்தத்தை இலங்கைக்கு கொடுக்க வேண்டும் என கோர வேண்டும்.

1987ஆம் ஆண்டு இந்தியாவின் தலையீட்டின் பிரகாரம்தான் 13ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது. எனவே, அதனை முழுமையாக அமுல்படுத்துவதற்கான அழுத்தத்தை இந்தியா கொடுக்க வேண்டும்." என தி இந்து பத்திரிகைக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.

### ஐயப்ப சுவாமி தரிசனம்

# புனித யாத்திரையாக்குவது தொடர்பில் கலந்துரையாடல்



ஐயப்ப சுவாமி தரிசனத்திற்காக இந்தியா செல்லும் இந்து பக்தர்களுக்கு எதிர்காலத்தில் ஒரு அங்கீகாரத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் அதை ஒரு புனித யாத்திரையாக மேற்கொள்வது தொடர்பாகவும் நேற்று(26) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும் சுனில் செனவி மற்றும் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. பிரதி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உட்பட உத்தியோகத்தர்களும் இரு அமைச்சுகளின் செயலாளர்களும் கலந்து கொண்டார்கள்.

இந்த யாத்திரையை புனித யாத்திரையாக பிரகடனப்படுத்துவது சம்பந்தமாக ஆலோசனைகளை அமைச்சர் வழங்கினார். இது சம்பந்தமாக சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவலகத்தின் பணிப்பாளர் உட்பட அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்தார்.

## ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

## உளவியல் பாதிப்பில் சாரதிகள்; உரிமையாளர்களும் பொறுப்பு

பண்டிகை காலத்தில் பொருட்களின் விலைகள் மாத்திரம் அதிகரிக்கவில்லை, அகால மரணங்களும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. இலங்கையை மரணங்கள் மலிந்த பூமி என்று மேற்கு நாடுகள் சுட்டுகின்றன.

யுத்தமும் இல்லை சண்டையும் இல்லை உள்நாட்டுப் போரும் இல்லை. ஆனால், அகாலத்து மரணங்கள் நிமிடத்துக்கு நிமிடம் நடந்து கொண்டே இருக்கின்றன.

ஆங்காங்கே சிறுசிறு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களிலும் கைகலப்புகளிலும் உயிரிழப்புக்கள் நடக்காமல் இல்லை. ஆயினும், வாகன விபத்துகளும், அதனால் ஏற்படும் அகால மரணங்களும் இலங்கையில் இன்று பாரிய பிரச்சினையாக உருவெடுத்து இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்தளவில் வீதி விபத்துக்கள் சர்வ சாதாரணமான மரணப்பொறியாகவே காணப்படுகின்றது. வாகனங்கள் நேருக்கு நேர் மோதுவதும், கட்டுப்பாட்டை இழந்து மரங்களோடு மோதுவதும், 50க்கு மேற்பட்ட பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ், பாதையை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்வதும் ..... நிமிடத்துக்கு நிமிடம் நடக்கின்ற சம்பவங்களாகிவிட்டன....

விபத்துக்கள் நடந்தவுடன், பொலிஸார் உஷார் அடைவதும், விசாரணை நடத்துவதும் தொய்வின்றி தொடர்கின்றன. என்றாலும், பாரிய மரணப் பொறியொன்றை இலங்கை எதிர்கொள்கிறது என்பதை, யாரும் பெரிதாக அலட்டிக் கொண்டதாக இல்லை.

விபத்துக்கள் நடந்த உடனேயே ஸ்தலத்துக்கு வரும் போக்குவரத்து பொலிஸார், கோடு கீறுவதும்... மஞ்சள் பட்டி அடிப்பதும்.... தண்டப்பணச் சீட்டை வழங்குவதும் தங்களது சட்ட நுணுக்கங்களாக பார்க்கின்றனர். இவையெல்லாம் செய்யக்கூடாதவைகள் அல்ல. ஆனால், இது மாத்திரம் தான் இவர்களது பணி என்ற தோரணை தொடர்கிறது. இந்த விடயத்தில், அதிகாரிகளை மாத்திரம் குற்றம் சொல்லி பிரயோசனமில்லை. சட்ட திட்டங்களுக்குள் அதனை அவர்கள் முடிக்கிறார்கள்.

இலங்கையில் வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு காரணம் என்ன...? இதற்கான அடிப்படைகள் கண்டறியப்பட்டதாகவும் இன்னும் தெரியவில்லை. யதார்த்தத்தோடு இந்த பிரச்சனையை அணுகி நடவடிக்கைகளில் இறங்காவிட்டால், விபத்துகளையும் உயிரிழப்புகளையும் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுவிடும். வாகன விபத்து ஒன்று நடந்தால், முதலில் குற்றம் சாட்டப்படுபவர் சாரதி. இதில் மாற்றுக்கருத்து இல்லை. சாரதி, குற்றவாளியாகவே அடையாளம் காணப்படுகிறார். சட்டம் அவரை தண்டிப்பதற்கு முன்பு, பொதுமக்கள் அவரை நையப் புடைப்பதும், விபத்தில் சிக்கிய வாகனத்தை தீ மூட்டி எரிக்கும் சம்பவங்களும் நடந்து கொண்டே இருக்கின்றன.

விபத்தில் சிக்கும் சாரதிகளை விசாரிக்கும் போது, போதையில் வாகன ஓட்டியதாக குற்றம் சாட்டப்படுகிறது. இதை விடவும், தூக்கத்தில் வாகனம் ஓட்டியதால் நடந்த விபரீதமென குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார். இது பொலிஸாரின் வழமையான கடமை.

ஆனால், சாரதிகளின் உளவியல் பாதிப்புகள் பற்றிய எந்த விடயங்களும் வீதி போக்குவரத்து பொலிஸாரால் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என்பது கவலைக்குரிய விடயம். சாரதிகளை வேலைக்கமர்த்துகின்ற வாகன உரிமையாளர்கள், அவர்களை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை யாரும் கண்டு கொள்வதில்லை. பொருளாதார பலவீனத்தில் இருக்கின்ற சாரதிகளை இரவு பகலாக ஓய்வின்றி பணியாற்றுவதற்கு வாகன உரிமையாளர்கள், பயன்படுத்துகிறார்கள் அல்லது அழுத்தம் கொடுக்கிறார்கள். இந்த நிலை இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

முதலாளிகளின் நிர்ப்பந்தத்திற்கு அடிபணிந்து வேலை செய்யும் இந்த சாரதிகள், உளவியல் பாதிப்புக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்பது மட்டுமல்ல, பாதி தூக்கத்திலும் தங்களை வருத்திக் கொள்கிறார்கள்.

வீதி விபத்துக்கள் அதிகரிப்பதன் பின்னணியில் , இந்த உளவியல் தாக்கங்களும் இருக்கிறது என்பதை, அரசாங்கமும் போக்குவரத்து பொலிஸாரும் புரிந்து கொள்ள வேண்டும்.

"விபத்து... விபத்து"... என்று கூக்குரல் இடுவதில் அர்த்தம் இல்லை. இத்தகைய விடயங்கள் தொடர்பில், வாகன உரிமையாளர்களுக்கும் சாரதிகளுக்கும் முறையான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். இதன் மூலம், விபத்துக்களை ஓரளவு கட்டுப்படுத்தக்கூடிய நிலை உருவாகலாம். இந்த விடயத்தில், அரசாங்கம் கடுமையான செயல் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்பதை நாம் அழுத்தமாக சொல்கின்றோம். அப்பாவி மக்களின் உயிர்களோடு வாகன உரிமையாளர்களும், முதலாளித்துவமும் விளையாடுவதற்கு இடம் அளிக்க முடியாது. "இயலாதவன் தலையில் பொழுது விடிவது போல"... எடுத்ததற்கெல்லாம் சாரதி மீது பழியைப் போட்டுவிட்டு வாகன உரிமையாளர்கள் தப்பி விட முடியாது. "எய்தவன் இருக்க அம்பை நோகுகின்ற..." நிலையாகவும் இதனை பார்க்க முடியும்.

இலங்கையில் பிரதான வீதிகள் எல்லாம், காப்பற் இடப்பட்டு, போக்குவரத்துக்கேற்ற சுமூக நிலை இருக்கின்றது. சாரதிகளின் அவசரமும், வேகமும் இந்த வீதிகளில் அபரி விதமாகவே இருக்கின்றன. வேகக் கட்டுப்பாட்டுக்கும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். சில வீதிகளில் மணிக்கு 140 க்கும் மேற்பட்ட வேகத்தில் வாகனங்கள் செலுத்தப்படுகின்றன. தண்டப் பணம் எழுதிக் கொடுப்பதனால் மாத்திரம், இதனை கட்டுப்படுத்த முடியாது. ஆங்காங்கே வீதிகளில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு சாரதியின் மனநிலையும் உடல் நிலையும் பரீட்சிக்கப்பட்ட பின், வாகனங்களை செலுத்த அனுமதிப்பது, விபத்துக்களை கட்டுப்படுத்துவதில் ஓர் ஆரோக்கிய நிலையை உருவாக்கும்.

# பலம் இழக்கிறதா இந்தியா? அநுரவை டில்லி குறிவைத்தது ஏன்?





தெற்காசியாவின் வல்லரசு இந்தியா என்பதே எழுதப்படாத சட்டம். ஆனால், இன்னமும் உலக வல்லரசுகளில் ஒன்றாக உருவெடுக்க இந்தியா கடுமையாக போராடுகிறது. கடந்த தசாப்தத்துடன் ஒப்பிடுகையில் இந்தியா பொருளாதாரத்தில் எதிர்பாராத வளர்ச்சியை அடைந்து வருகிறது. இந்தியாவின் இன்றைய அந்நிய கையிருப்பு 800 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இந்தியாவின் வளர்ச்சியானது ஆசிய பிராந்தியத்துக்கு மிகப்பெரிய சந்தை வாய்ப்புகளை உருவாக்கும் என்பதுடன், இலங்கை, நேபாளம், மாலைதீவு, பங்களாதேஷ் உட்பட பல தெற்காசிய நாடுகளில் பொருளாதாரத்தையும் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டுசெல்வதற்கான வாய்ப்புகளும் உருவாகும்.

### தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவுக்கு எதிரான மனநிலை

இந்தியா அதன் அண்டைய நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் செல்படுவதாக கூறுகிறது. ஆனால், அண்மைக்காலமாக இந்தியாவுக்கு எதிரான போக்கு தெற்காசிய பிராந்தியத்தில் அதிகரித்துள்ளதுடன், பல நாடுகள் இந்தியாவின் தலையீட்டை நேரடியாக எதிர்த்துள்ளன.

மாலைதீவில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னர் அந்நாட்டு ஜனாதிபதி முகமது முய்ஸு, இந்திய படைகளை மாலைதீவிலிருந்து வெறியேறுமாறு கூறியதுடன், சீனாவுக்குச் சார்பான போக்கை பின்பற்ற ஆரம்பித்தார். இதனால் இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் பாரிய விரிசல் ஏற்பட்டது. பின்னர் இந்த விவகாரம் ஓரளவு சுமுகமாகியுள்ளது. மாலைதீவு ஜனாதிபதி தமது முதல் வெளிநாட்டுப் பயணத்தை துருக்கிக்கே மேற்கொண்டிருந்தார்.

இது இதற்கு முன்பு மாலைதீவு ஜனாதிபதிகள் பின்பற்றிய இந்திய பயணத்துக்கு மாறாக அமைந்தது. நேபாளத்திலும் இந்தியாவுக்கு எதிரான சில கருத்துகள் உருவாகியுள்ளன. நோபாளம் இந்து மதத்தை பின்பற்றும் மக்களை பெரும்பான்மையாக கொண்ட நாடாக உள்ள போதிலும், அங்கு இந்தியாவின் செல்வாக்கை அவர்கள் விரும்பவில்லை. இதனால் நேபாளப் பிரதமராக தெரிவான ஷர்மா ஒலி தனது முதல் வெளிநாட்டு பயணத்தை சீனாவுக்கு மேற்கொண்டிருந்தார்.

பங்காளதேஷிலும் இந்தியாவுக்கு எதிரான மனநிலை தீவிரமாக உள்ளது. குறிப்பாக முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சி இந்தியாவுக்கு சார்பாக இருந்ததாக அவரது ஆட்சிக்காலத்தில் பல எதிர்ப்புகள் இருந்தன. அதனால் பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்தின் தலைவரான முஹம்மது யூனுஸ் அமெரிக்காவிற்கே தமது வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டிருந்தார். பாகிஸ்தான் எப்போதும் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்ட நாடு. அதேபோன்று ஆப்கானிஸ்தானும் இந்தியாவின் செல்வாக்கை விரும்பாத நாடு.

### அநுரவுக்கு டில்லி சிவப்பு கம்பள வரவேற்பு

விரும்பியோ விரும்பாமலோ இலங்கையில்தான் இந்தியாவின் செல்வாக்கு அதிகமாக உள்ளது. அது இந்நாட்டின் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் எதிர்ப்புகளை பல சந்தர்ப்பங்களில் ஏற்படுத்தியுள்ளது. என்றாலும், இதனை சமாளித்து சீனாவின் செல்வாக்கை இலங்கையில் தவிர்க்கும் வண்ணம் தமது இராஜதந்திர நகர்வுகளை புதுடில்லி தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்தால் அது இந்திய தீப கற்பத்தில் தேசியப் பாதுகாப்புக்கு மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தும் என்பது சர்வதேச அரசியல் ஆய்வாளர்களது கருத்து.

அதேபோன்று இலங்கையில் இந்தியாவுக்கு எதிரான இராஜதந்திர நகர்வுகள் எடுக்கப்பட்டால் அது இலங்கைக்கு இருள் சூழ்ந்த யுகத்தை உருவாக்கும் என்பதும் யதாரத்தம். இதனை உணர்ந்தவர்களாகதான் கடந்தகால இலங்கையின் ஆட்சியாளர்கள் செயல்பட்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காலத்தில் மாத்திரம் ஓரளவு இந்தியாவின் எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டிய சூழல் இருந்தது. ஆனால், 2015இல் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மீண்டும் இந்தியாவுடன் நெருக்கமான உறவை பேணி இருதரப்பு உறவை வலுப்படுத்தினார்.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கொள்கைகள் சீனாவுக்கு ஆதரவாக இருக்கும் என்றே அவர் ஆட்சிக்குவர முன்னர் பரவலாக எதிர்வுக்கூறப்பட்டது. ஆனால், அவர் ஆட்சிக்கு வர முன்னரே புதுடில்லி அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பை அளித்திருந்ததுடன், ஆட்சிமாற்றத்தின் பின்னர் புதுடில்லிக்கு அழைத்து மகத்தான கௌரவத்தை வழங்கி அவரை தமது பாதைக்கு நகர்த்தியுள்ளதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### சீனாவை சமாளிக்கும் அநுரவின் அணுகுமுறை

சீனாவின் பரந்தப்பட்ட முதலீடுகளால் தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியா அதன் செல்வாக்கை இழந்துவரும் சூழலில் இலங்கையுடனான இராஜதந்திர உறவை மிகவும் வலுப்படுத்திக்கொள்ளும் தேவை இந்தியாவுக்கு உள்ளது. அதன் காரணமாக இலங்கையுடனான வர்த்தக மற்றும் ஏனைய உறவுகளை விரைவாக வலுப்படுத்தும் தேவை இந்தியாவுக்கு எழுந்துள்ளது. இதற்கு ஜனாதிபதி அநுரவின் சில கருத்துகள் சாதகமாக இருப்பதாக இந்தியா கருதுவதுடன், அடுத்த ஐந்தாண்டுகள் மிகவும் ஸ்திரமான ஆட்சியொன்று இலங்கையில் நிலவும் என்பதும் இந்தியாவின் எதிர்பார்ப்பு. அதன் காரணமாகவே புதுடில்லியுடன் மிகவும் நெருக்கமான உறவை பேணிய ரணில் விக்ரமசிங்க போன்றவர்களைவிட அநுரவுக்கு மிகப்பெரிய வரவேற்பை டில்லி வழங்கியுள்ளது.

ஆனால், ஜனாதிபதி அநுர, இந்தியாவுக்கு முக்கியத்துவம் அளிக்கும் அதேவேளை, சீனாவின் அதிகமான முதலீடுகளை ஈர்த்து இருநாடுகளுடனும் சமதளத்தில் இராஜதந்திர உறவை கட்டியெழுப்ப விரும்புகிறார். அதன் காரணமாகவே இந்திய பயணத்தை தொடர்ந்து அவர் பீஜிங் செல்கிறார். இது சீனாவை சமாளிக்கும் அநுரவின் அணுகுமுறை என இலங்கையின் அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### டில்லி, பீஜிங்கை எவ்வாறு கையாளப் போகிறார் அநுர?

சீனாவை சமாளிக்கும் அநுரவின் அணுமுறைக்கு தேவையற்ற தடைகளை ஏற்படுத்த கூடாதென்பதில் இந்தியா மிகவும் கவனமாக இருப்பதுடன், இலங்கையில் இந்தியாவின் செல்வாக்கை அடுத்த ஐந்து ஆண்டுகளில் மிகவும் பலமாக்கிக்கொள்ளும் வகையில் செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளது. வழமையாக சீன கப்பல்கள் இலங்கைக்கு வரும் போது டில்லியிலிருந்து செய்தியொன்று வெளியாகும். ஆனால், கடந்தவாரம் சீன கப்பலொன்று கொழும்புக்கு வந்தது. அதனை பிரதமர் ஹரிணி அமரசூரியவே நேரில் சென்று வரவேற்றார். ஆனால், டில்லியில் இருந்து வெளியாகும் வழமையான கவலை செய்தி வெளியாகவில்லை. இது இந்தியாவின் இராஜதந்திரத்தை வெளிப்படுத்துவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சீனா 'பெல்ட் அண்ட் ரோட்' திட்டத்தில் (BRI) தெற்காசியாவில் சிறிய நாடுகளின் பொருளாதார மற்றும் மூலோபாய உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இதனை முறியடித்து தெற்காசியாவில் பலமான நாடாக உருவெடுப்பதற்கான திட்டங்களை புதுடில்லி வகுத்துள்ளது. அதனை அயல்நாடுகளுக்கு முன்னுரிமை என இந்தியா கூறுகிறது.

அதன் ஒருகட்டமாக இந்திய பிரதமர் மோடி விரைவில் இலங்கைக்கு வரும் உறுதிமொழியை வழங்கியுள்ளார். அவரது விஜயம் இலங்கையுடனான உறவை மற்றுமொரு அத்தியாயத்தை நோக்கி நகர்த்தும் என இந்தியா நம்புகிறது. புதுடில்லி – கொழும்புக்கான உறவு அநுரவின் ஆட்சியில் எப்படி இருக்க போகிறது. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான பிராந்திய போட்டிகளை எவ்வாறு அநுர சமாளிக்க போகிறார்?. சோஷலிச கொள்கையின் வழித்தோன்றலாக தேசிய மக்கள் சக்தியும் அதனை தலைமை தாங்கும் அநுரவும் இந்தியா மற்றும் சீனாவை எவ்வாறு கையாள போகிறார் என்பதை சர்வதேசம் உற்று நோக்க ஆரம்பித்துள்ளது. ■






சுப்ரமணியம் நிஷாந்தன்

# வடக்கை சோகமயமாக்கிய ஆழிப்பேரலையின் 20வது ஆண்டு நினைவேந்தல்














சுனாமி ஆழிப்பேரலையின் 20வது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்று வடமாகாணத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உணர்வுப் பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டதோடு மேலும் பல இடங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அலுவலகத்தின் ஏற்பாட்டில், ஆழிப் பேரலையின் உயிர்நீத்த உறவுகளுக்கான 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சுனாமி பேரலை நினைவேந்தலில் உலகெங்கும் குறிப்பாகத் தமிழ்த் தேசத்தில் இப் பேரலை ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியும் கருத்துரையிடப்பட்டதுடன் உயிரிழந்தவர்களுக்காக ஒளிச்சுடர் ஏற்றி மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் அமைந்துள்ள உடுத்துறை பகுதிசுனாமி நினைவாலயத்தில் நேற்று காலை 9:00 மணியளவில் ஆரம்பமாகியது.

பொது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு பொது நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அழுது குறித்த தமது ஆற்றாமை வெளிப்படுத்தினர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரம், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ச.சிறீபவானந்தராஜா, இ.அர்ச்சுனா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாவட்ட பதில் அரசாங்கதிபர் எஸ்.முரளீதரன், வடமாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் அரச அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.




**வவுனியா**

வவுனியா மாவட்ட செயலகத்தில் சுனாமி பேரலையில் உயிர் நீத்தவர்களின் 20 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

அதேவேளைப் பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவு தூபியில் பிரார்த்தனை நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா – கோவில் குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் மற்றும் அகிலாண்டேஸ்வரர் ஆலயதர்மகர்த்தா சபையும் இணைந்து அனுஷ்டிக்கப்பட்டது.

**மன்னார்**

மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே.திலீபன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

மன்னார் பிரதான பாலத்தடி இல் மன்னார் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் லுஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கடற்கரை பகுதியில் தீபம் ஏற்றி மலர் தூவி உயிர் நீத்தவர்களுக்காக உணர்வுப்பூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

---

## மன்னார் சிறுமி கொலை

# தப்பிச் சென்று கைதான நபருக்கு விளக்கமறியல்




**(நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

தலை மன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 10 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 55 வயதுடைய நபரை எதிர் வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரை (09-01-2025) விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் நேற்று (26) வியாழக்கிழமை உத்தரவிட்டது.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் 10 வயதுடைய சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தப்பிச் சென்ற குறித்த நபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) திருகோணமலை குச்சவெளி பிரதேசத்தில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் பொலிசார் தடுத்து வைத்து விசாரணைகளின் பின்னர் கடந்த திங்கட்கிழமை (16) மன்னார் நீதிமன்றத்தில் முன்னிறுத்தினர்.இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார். இந்த நிலையில் குறித்த நபர் இன்றைய தினம் வியாழக்கிழமை (26) மீண்டும் விசாரணைக்கு மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த நபரை எதிர்வரும் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி மாலை காணாமல் போன அக்கிராமத்தைச் சேர்ந்த 10 வயது சிறுமி தனது அம்மம்மாவின் வீட்டிலிருந்து சுமார் 300 மீட்டர் தூரத்தில் உள்ள தென்னந் தோப்பிலிருந்து மாறு நாள் 16 ஆம் திகதி காலை சடலமாக மீட்கப்பட்டார். சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட சடலம் பரிசோதனையின் போது குறித்த சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கி கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை தெரிய வந்தது. குறித்த கொலை தொடர்பாக வெளி மாவட்டத்திலிருந்து வருகை தந்து குறித்த தோட்டத்தில் வேலை செய்து வந்த 55 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த மே மாதம் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்த நிலையில் வைத்தியசாலையிலிருந்து தப்பிச் சென்ற நிலையில் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

# யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டு விழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையுடன், யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பேரவையும், மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்தும் மாவட்ட பண்பாட்டு விழாவானது இன்று (27) வெள்ளிக்கிழமை அரியாலை மகாமாரியம்மன் மண்டபத்தில் இடம்பெறுகிறது.

யாழ் மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவரும், மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஓய்வு நிலை, யாழ். மாவட்டச் செயலாளர் செல்லையா பத்மநாதன் கலந்து கொள்வர் அத்துடன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ் மற்றும் ஓய்வு நிலை அழகியல் உதவிக் கல்விப் பணிப்பாளரும் பன்னாட்டு ஆடற்கலை ஆற்றுக்கையாளருமான கலைஞர் வேல். ஆனந்தன் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலக ஓய்வு நிலை பிரதம கணக்காளர் சுப்பையா சண்முகரத்தினம் மற்றும் நல்லூர் பிரதேச செயலக ஓய்வு நிலை கலாசார உத்தியோகஸ்தர் ரஜனி குமாரசிங்கம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இந்நிகழ்வில் "யாழ் முத்து", "இளங்கலைஞர்" விருதுகளும் வழங்கப்படுவதுடன், பல கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

---

# கிளிநொச்சி விபத்தில் குழந்தை பலி; ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயம்

**(பு.கஜிந்தன்)**

கிளிநொச்சி நகர் கோர விபத்தில் 2 வயதுக் குழந்தை பலியானதுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது . மோட்டார் சைக்கிளுடன் ரிப்பர் வாகனம் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

A-9 வீதியால் பயணித்த ரிப்பர் வாகனம் குறித்த மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியதால் சுமார் 100m பாதையை விட்டு விலகிப் பயணித்துள்ளது.

விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளையும் ரிப்பர் வாகனம் குறிப்பிட்ட அளவு தூரம் இழுத்துச் சென்றுள்ளதுடன், தொழிற்பயிற்சி நிறுவனத்தின் விளம்பரப் பலகை மற்றும் தொலைத்தொடர்பு கம்பம் உள்ளிட்டவற்றையும் சேதப்படுத்தியுள்ளது.

ரிப்பர் வாகனத்தை செலுத்திய சாரதி மதுபோதையில் இருந்ததாக சம்பவ இடத்தில் நின்ற மக்கள் குறிப்பிடுகின்றனர். சாரதியை பொலிசார் கைது செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 2 வயதுக் குழந்தை பலியானதுடன் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் 6 வயதுடைய குழந்தை படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.



# கதைகளின் ஒட்டு மொத்தக் கலவை

## எம்.டி. வாசுதேவன் நாயர்

எழுத்துலகம் கற்றுத்தந்த விரிந்த பரப்பினில் படைப்பாளர்கள் மிக முக்கியமானவர்கள். அவர்களின் மொழி வகையிலிருந்து பிறப்பெடுத்துக் கொண்ட எழுத்துக்களின் வாழ்வினை நாம் மிக நேர்த்தியாக தரிசிக்க முடியும். எழுத்துக்கள் மாய வித்தைகளின் கூட்டாகவும், எதிர்பாரா நண்பனாகவும் படைப்பாளர்களின் வாழ்வில் ஒன்றித்து விடுகிறது. ஒரு எழுத்தாளனால் எழுதப்படுகின்ற எழுத்துக்கள் எப்பொழுதும் அவனுடைய மனதின் பிரதிபலிப்பாகவே இருக்கும். அதிலும் இலக்கியம் சார்ந்த படைப்புக்களை எழுதுகின்ற படைப்பாளிகளின் சொற்களை மீள் பரிசீலனை செய்கின்ற போது அவை உள் மனதின் ஏக்கங்களாகவும், சமூகம் மீதான அன்பின் வெளிப்பாடாகவும், வாழ்க்கையின் போராட்ட பகுதிகள் சார்ந்த குறியீடாகவும் பிரதிபலிக்கும் என்பதினை நாம் அவதானிக்க முடியும்.

இதனை முன் வைத்துதான் ஒரு எழுத்தாளன் தன்னுடைய எழுத்துக்களில் மட்டும் தங்கிவிடாது சமூக ஓட்டத்தின் செயற்பாட்டாளனாகவும் இயங்க வேண்டும் என்பதினை கதையாட முற்படுகின்றனர். எமது படைப்பிலக்கியமானது கவிதையாகவோ, கதையாகவோ, நாவலாகவே இருக்கின்ற போது அதில் கூறப்படுகின்ற விடயங்கள் எம்மை செயற்பாட்டாளனாக காட்டுவதற்கு முனைகிறது என்பதினை நாங்கள் புரிவது அவசியமாகும். சமூக சீர்கேடுகள் பற்றிய குறியீடாக ஒரு எழுத்தாளனின் பிரதிகள் பேசுமாயின் அதனை வாசிக்கின்ற வாசகன் அவ் எழுத்தாளர் சமூகத்தினை சீர் படுத்துகின்ற ஒரு செயற்பாட்டுவாதியாக இருக்க வேண்டும் என நினைக்கிறான். இதனைத்தான் மனசாட்சியினை அடிப்படையாகக் கொண்ட எழுத்துக்கள் என்று கூறுவார்கள்.

எழுத்தாளர்களின் எழுத்தின் போக்கானது திசைமாறியும், எழுத்தாளர்கள் செயற்பாட்டாளர்களாக இல்லாமலும் ஒரு பிரதி வாசிக்கப்படுமாயின் அது அப்பிரதியினுடைய தோல்வி எனலாம். இலக்கியம் எப்பொழுதும் நேர்மையானதாக இருக்க வேண்டும், அதே போல இலக்கியவாதிகளும் நேர்மையானவர்களாக இருக்க முயற்சிக்க வேண்டும், இவ்விரண்டு விடயங்களும் ஒன்றாக செயற்படுகின்ற போதுதான் அது சமூகப்படைப்பாக உணரப்படும் என்பதினை கவனத்தில் கொள்ளல் மிக அவசியமாகும்.

மலையாள எழுத்துலகின் கதை சொல்லியாகவும், திரைக்கதையாசிரியராகவும் வெளிப்பட்டு அற்புதமான இலக்கியங்களின் உரித்தாளனான எம்.டி. வாசுதேவன் நாயர் மிகக் காத்திரமான படைப்பாளியாவார். இலக்கியப் பரப்பினுல் மிகவும் சக்தி வாய்ந்த படைப்புக்களாக பெரும் வகிபங்கினைக் கொண்டியங்கும் எம்.டி. வாசுதேவனின் படைப்புகள் காலத்தால் மறக்கடிக்கப்பட முடியாதவை. அதிலும் மாய விம்பங்களை உடைத்து மனித வாழ்வின் யதார்த்தங்களை பதிவு செய்யும் சிறுகதைகள், நாவல்கள் மிகவும் அற்புதமானவை. மலையாள மக்களினதும் அவர்களது வாழ்வினதும் நிஜ முகத்தினை வெளிப்படுத்தும் எம். டி. வாசுதேவன் நாயரின் பாத்திர வார்ப்புகள் இலக்கியமாக அன்றி வரலாற்றின் மீதான ஆதாரங்களுக்காக பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்களாகும். இன்றைய இலக்கியப் போக்கினைப் பொறுத்தவரை மாயஜாலங்கள் மீதான கதைகள் அதிகம் இறக்குமதி செய்யப்படுகின்ற காலமாக மாறியிருப்பதினை நாம் அவதானிக்கலாம்.

அந்த நிலைப்பாட்டில் இருந்து வேறுபட்டு மண் வாசனையின் நுகர்வினையும், அம்மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களையும், அவர்கள் செதுக்கும் நிலங்கள் பற்றியும், அவர்களின் கனவுகள் பற்றியும் யதார்த்த வாழ்வின் அம்சங்களைப் பேசும் படைப்புகள் அவசியம் வெளிவர வேண்டியவையே. அவ்வாறான படைப்புக்களின் வருகை மூலமாகத்தான் எமது வருங்கால ஒரு சமூகத்தின் மீது எமது கபடமற்ற வாழ்வினை முன் வைக்க முடியும் என்பதினை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எம். டி வாசுதேவன் நாயரின் படைப்புக்களில் இவற்றினை மிகச் சுலபமாக அனுபவிக்கலாம்.

சாகித்திய அகடமி, கேரள அரசின் விருது, பத்மபூஷண விருது என ஏராளமான விருதுகளை தனது படைப்புக்களின் மூலமாக பெற்றுக் கொண்டார் எம்.டி. வாசுதேவன் நாயர். வளர்த்து மிருகங்கள் எனும் சிறுகதை மூலமாக எழுத்துலகத்திற்கு அறிமுகமாகி காலம், இரண்டாமிடம் நாவல்கள் மூலமாக தனக்கான அடையாளத்தினை வகுத்துக் கொண்டார். பெரும்பாலும் இவரின் படைப்புக்கள் தமிழில் வெளிவந்துள்ளன. இலக்கியங்களுக்கு எப்பொழுதும் இருக்கின்ற சிறப்பம்சம் யாதெனில் காலத்திற்கு காலம் அது புதுமையான மனிதர்களை அறிமுகப்படுத்துவதுதான். அவ்வாறே எம். டி வாசுதேவன் நாயரும் கதைகளின் கூடாரமானார்.


# சீனாவின் செந்நிற பக்கங்கள்






ஏ.எம். சாஜித் அஹமட்

சீனாவின் மரபியல் ரீதியான வரலாற்றினை பதிவு செய்த நாவலாக யூ ஹுவா எழுதிய **Chronicle Of a Blood Merchant** ரத்தம் விற்பவனின் சரித்திரம் நாவலானது வரலாற்றில் மிக முக்கிய திருப்பு முனையினை ஏற்படுத்திய படைப்பாகும். தனது குடும்பம் வாழ்வதற்காக இரத்தம் விற்றுப் பிழைப்பவனின் வரலாற்றினை கதையாடுகின்ற இந்நாவல் சீன மக்களின் வறுமை, அறியாமை போன்றவற்றை வாசகர் மத்தியில் படம் பிடித்துக் காட்டுகின்றது. ஒரு காலகட்டத்தின் போது சீனாவில் வறுமை நிலையினில் வாழ்ந்த மக்கள் தங்களின் வயிற்றுப் பிழைப்பிற்காக இரத்தத்தினை விற்கின்ற செயற்பாடானது தொடரான ஒரு தொழில் முறை போன்று இயங்கி வந்திருக்கிறது. இப்படியான காரணங்களாலும், சரியான கவனயீர்ப்பு இல்லாததினாலும் சீன மக்கள் பல்வேறு நோய்களுக்கும் முகம் கொடுக்க நேரிட்டது. சீன மரபில் இரத்த விற்பனை என்பது ஒது ஈனத் தொழிலாக பார்க்கப்பட்ட விதத்தினை நாவலாசிரியர் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறார். இருபதாம் நூற்றாண்டில் சீனர்கள் எதிர்கொண்ட




வறுமை, துன்பமான வாழ்க்கைமுறை, கட்டமைப்பு இல்லாத கல்வி முறைமை போன்ற கீழ்த்தட்டு மக்கள் அனுபவித்த துயரமான வாழ்வியல் நிலையினை நகைச்சுவைப் பாணியோடு ஷரத்தம் விற்பவனின் சரித்திரம் நாவலானது மிகப் புதுமையான மொழி நடையுடன் பேசியிருக்கிறது எனலாம். ஆங்கிலத்திலிருந்து இந்நாவலினை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார் யூமா வாசுகி.


இந்நாவலில் இரத்தம் விற்றுவிட்டு வருகின்ற தனது கணவனிடம் மனைவியான ஸு யுலான் பேசுகின்ற வார்த்தையானது நாவலின் மையக்கருத்தினையும், சீனர்களின் பண்பாட்டில் இரத்தம் விற்கின்ற செயற்பாடானது ஆதிகாலம் தொட்டு எவ்வாறான முறையில் நடைபெற்றிருக்கிறது என்பதை காட்டுகிறது. உங்களுக்குள் ஓடும் ரத்தம் உங்களுக்கு உங்கள் முன்னோர்களிடமிருந்து தலைமுறை தலைமுறையாகக் கைமாறி வந்தது. நீங்கள் எண்ணெய்ப் பலகாரம் விற்கலாம், உங்கள் இடத்தை விற்றுத் தொலைக்கலாம் ஆனால் ரத்தம் விற்கக்கூடாது. நீங்கள் ரத்தம் விற்பதை விட உங்கள் உடலை விற்பதுதான் நல்லது. உங்கள் உடல் உங்களுடையது. ஆனால் ரத்தம் விற்பது என்பதற்கு உங்கள் முன்னோர்களை விற்பது என்பதுதான் அர்த்தம். நீங்கள் உங்கள் முன்னோர்களை விற்றீர்கள் மனித வாழ்வின் வறுமை நிலையினை நகைச்சுவை வரையறைகளுடன் பறைசாற்றிய நாவல்களுள் ரத்தம் விற்பவனின் சரித்திரம் அற்புதமான படைப்பு என்பதில் ஐயமில்லை.

ரத்தம் விற்பவனின் சரித்திரம்; சீனாவின் மையப்பகுதிக்கு நம்மை இட்டுச் செல்கிறது. சாதாரண சீனர்கள் வாழும் நகரங்களுக்கும், தெருக்களுக்கும், முன்வாசலுக்கும், அடுக்களைக்கும், படுக்கையறைக்கும் நம்மை நகர்த்திச் செல்கிறது. இவர்கள் மாபெரும் வீரர்களோ, அரசியல் வாதிகளோ இல்லை. கண்ணியத்தோடும் நம்பிக்கையோடும் வாழ எத்தனிக்கும் இவர்களது துணிவும் முனைப்புமே இவர்களை உண்மையான அருஞ்செயல் வீரர்களாக்குகின்றன. இந்நூல் ஒரு மாணிக்கக்கல் என்கிறார் சீன எழுத்தாளர் வாங் பிங்.

# ரத்தம் விற்பவனின் சரித்திரம் எழுத்துக்களின் சாபவிமோசனம்

**- பெருமாள்முருகன்**

2010 ல் வெளிவந்து சுமார் நான்கு வருடங்களுக்குப் பிறகு பெரும் சர்ச்சையினை கிளப்பியிருக்கும் ஷமாதொருபாகன்; இலக்கிய செற்பாட்டில் மிகத்தீவிரமாக செயற்பட்டுக் கொண்டிருந்த பெருமாள் முருகன் எனும் பெருத்த அடையாளத்தின் பேனாவினை முறித்திந்தது. இதுவரை காலமும் பல நாவல்களையும், கதைகளையும், கட்டுரைகளையும் எழுதி தனக்கான தனித்துவமிக்க இடத்தினை தக்க வைத்துக் கொண்ட பெருமாள் முருகன் எனும் படைப்பாளி மாதொருபாகன் சர்ச்சையினை தொடர்ந்து தன்னுடை பேனாவின் குமிழினை உடைத்துக் கொண்டதாக அன்று அறிவித்தார். தனது குடும்பத்தின் மீது பாய்கின்ற உயிர் அச்சுறுத்தலை கருத்தில் கொண்டு எழுதுவதை நிறுத்தி விட்ட பெருமாள் முருகன் இலக்கியம் சார்ந்த அனைத்து துறைகளிலிருந்தும் ஓய்வு நிலையினை அறிவித்திருக்கிறார் என அன்று செய்திகள் வெளியான போது அதிர்வலைகள் மட்டுமே மிச்சமானதாயிருந்தன.



அப்படி என்னதான் எழுதியிருந்தார் மாதொருபாகனில், இந்தியாவில் உள்ள ஆங்கிலயரின் ஆட்சி வரலாற்றுக்கு முன் நடந்த திருச்செங்கோட்டு அர்த்தநாரீஸ்வரர் (மாதொருபாகன்) ஆலயத்தை சுற்றி வரும் நம்பிக்கையின் செய்றபாடு ஒன்றினை பதிவிட்டமையே சர்ச்சைக்கு முழுக்காரணமாய் ஆகிவிட்டிருக்கிறது. இக் கோவிலில் நடைபெறும் தேர்த்திருவிழாவின் கடைசி பதின்நான்காம் தினத்தன்று பிள்ளைப்பேறு அற்ற பெண்கள் தன் கணவன் அல்லாத வேறு ஆடவருடன் தொடர்பு கொண்டு பிள்ளைப் பாக்கியத்தினை பெறுகின்ற செயற்பாடு ஒரு வரலாற்று நிகழ்வாகவும், நாவலின் மையக் கதையாகவும் மாதொருபாகனில் இடம்பெறுகிறது. இது தமிழரின் மரபு, பண்பாடு, கலாசாரம் போன்றவற்றை அவமதிக்கின்ற செயல் என போர்க் கொடி தூக்கப்பட்டது. இதனை அதிகார செயற்பாடாக்க முனைந்த சில சுய நலமிகள் பெருமாள் முருகனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உயிர் அச்சுருத்தல் கொடுத்தமையால் பெருமாள் முருகன் தன் எழுத்தின் தீபத்தினை அனைத்து விட்டு பெருமாள் முருகன் என்பவர் தற்கொலை செய்து கொண்டார். இப்பொழுது இருப்பவர் வெறும் பெ. முருகனே என தன் அடையாளத்தினை மாற்றிக் கொண்டார்.

இத்தனைக்கும் பெருமாள் முருகன் ஒரு தமிழ் பேராசிரியர், தமிழ் வட்டார நாவலின் முன்னோடி எழுத்தாளர், இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்றவர், காலச்சுவடு, மனஓசை, குதிரை வீரன் பயணம் ஆகிய இதழ்களின் ஆசிரியர் குழுவில் முக்கிய பங்காற்றியவர். ஒன்பது நாவல்கள், நான்கு சிறுகதை தொகுப்புகள். நான்கு கவிதை தொகுப்புகள், எட்டு கட்டுரை தொகுப்புகள், மூன்று மொழி பெயர்ப்புக்கள், நான்கு பதிப்புகள், ஒரு கொங்கு வட்டாரச் சொல்லகராதி என பல துறைகளிலும் தன் ஆளுமையினை நிலை நாட்டியவர்.

ஒரு படைப்பு உருவாகின்ற போது அதன் உள்ளாய்வானது பண்பாட்டு ஒழுக்கவியல் கலாசார விழுமியங்கங்களின் மீது அதிக கரிசனை நிகழ்த்தி வெளிவருகின்ற போதுதான் சமூக மையத்திற்கும், அதிகார மேம் போக்கு தன்மைகளில் இருந்தும் காப்பாற்றப்படும் என்பதை நாம் மாதொருபாகனிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

நீதிமன்றத்தின் தீர்ப்பிற்குப் பிறகு எழுத்தாளர் பெருமாள் முருகன் தன் கருத்துச் சுதந்திரத்தினை பயன்படுத்தலாம் என கூறப்பட்டது. இன்றும் எழுதிக் கொண்டிருக்கிறார் ஆசான்.

# கல்விக்காகப் பயணித்த பேராசிரியர் இஸ்ஹாக்கின் மரணம் பெரும் இழப்பு




தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் வேந்தர் பேராசிரியர் அச்சி எம் இஸ்ஹாக் காலமான செய்தி மிகவும் வருத்தமளிக்கிறது.

இவர் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தினை ஸ்தாபிப்பதற்காக முன்னின்று உழைத்தவர்களுள் ஒருவர். பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தினை நிறுவுவதற்கு இப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயில் முன்னெடுத்த காத்திரமான முயற்சிகளுக்கு பக்கபல மாக நின்றவர் பேராசிரியரர் அச்சி எம்.இஸ்ஹாக்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தினை ஸ்தாபிப்பதற்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்தபோது, அவரோடு இணைந்து பணியாற்றும் அரிய வாய்ப்பினை முன்னாள் உபவேந்தர் கலாநிதி இஸ்மாயில் எங்களுக்கு ஏற்படுத்தித்தந்திருந்தாரர்.

அந்த நாட்களில் பேராசிரியர் அச்சி எம் இஸ்ஹாகின் வாழ்க்கை முறை எம்மை பிரமிக்கவைத்திருந்தது.

ஒரு நாள் பொறியியல் பீடத்திற்கான ஆரம்பப் பிரேரணையினைத் தயாரிப்பதற் காக அவரது நிந்தவூர் இல்லத்திருந்து கொழும்பு செல்ல வேண்டியிருந்தது. அந்தவேளை, தொழுகை நேரத்தினைக் குறிப்பெடுத்து, அதற்கேற்றால்போல் தனது பயணத்தினை ஆரம்பித்தார். திட்டமிட்டதுபோல், மொனராகலையில் தொழுமையினை நிறைவேற்றினார்.

தனது பயணத்தில் புனித குர்ஆனை திலாவத் செய்துகொண்டு பயணிக்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தார்.


அவரது ஜாவத்தை இல்லத்தில் இருந்து பணிகளை மேற்கொண்டபோது, தொழுகை நேரமானதும் உரிய நேரத்திற்கு ஜாவத்தை ஜும்ஆப் பள்ளிக்குச் சென்று தொழுமையினை நிறைவேற்றும் பழக்கத்தினைக் கொண்டிருந்தார்.

தனது வயதான காலத்திலும் மிகவும் சுறுசுறுப்பாகவும் புத்திக்கூர்மையு டன் காணப்பட்ட அவர், தனது பணியினை நிறைவேற்று வதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். நாம் தங்கியிருந்த நாட்களில் மத்ரசா மாணவர்களுக்கு நன்கொடைகளை வழங்குவதற்கு தயாரானதனையும் அவதானிக்கமுடிந்தது.

பல்கலைக்கழகங்களில் வேந்தர் பதவி என்பது சம்பிரதாயபூர்வமானது. பெரும்பாலான வேந்தர்கள் பல்கலைக் கழகங்களில் பட்டங்களை வழங்குவதுடன் தமது பணியினை சுருக்கிக் கொள்வது வழக்கம்.

ஆனால் பேராசிரியர் அச்சி எம்.இஸ்ஹாக் தன்னை ஒரு சம்பிரதாய பூர்வ வேந்தராக வரையறுத்துக் கொள்ளவில்லை. அவர் தனது துறைசார் அறிவினைக் கொண்டு தென்கிழக்குப் பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பங்காற றியுள்ளார். இப்பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் அவரை என்றும் நினைவுகூரும்.

எல்லாம் வல்ல இறைவன் அன்னாரது பாவங்களை மன்னித்து, அவரது



நல்லமல்களைப் பொருந்திக் கொண்டு, அவரது மண்ணறை வாழ்க்கையினை விசாலமாக்கி வைக்கட்டும்! ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் மேலான சுவனத்தினை அவருக்கு வழங்கட்டும்!

▪ **எம்.ஏ.எம். பௌசர்,**
**தென் கிழக்குப் பல்கலைக்கழகம்**

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மொட்டு கட்சி போட்டியிடும்



உள்ளூராட்சிசபைத் தேர்தலில் வடக்கு, மலையகம் உட்பட அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மொட்டு சின்னத்தின் கீழ் போட்டியிடும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் நாம் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு புதிதாக வேட்பு மனுக்கோரும் திட்டத்துக்கு நாம் முழுமையாக ஆதரவு வழங்குவோம். கட்சி தலைவர்கள் கூட்டத்திலும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளோம்.

அதேபோல மாகாணசபைத் தேர்தலிலும் மொட்டு சின்னத்தின் கீழ்தான் போட்டியிட உத்தேசித் துள்ளோம். கட்சியில் இருந்து நாம் எவரையும் வெளியேற்றவில்லை. வெளியேறியவர்கள் எம்முடன் இணைவது தொடர்பில் பேச்சு நடத்தலாம்." என தெரிவித்துள்ளார்.

# வாழை, கொய்யா பயிர்களை துவம்சம் செய்த யானைகள்



▪ **எம்.ரீ.ஆரிப்**

மஹாவிலச்சிய பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட ஒயாமடுவ பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை இரவு காட்டு யானைகள் அப்பகுதியிலுள்ள பயிர்களுக்கு துவம்சம் செய்தன. இதனால் தென்னை, வாழை, கொய்யா உள்ளிட்ட பயிர்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளன.

இன்னும் சில நாட்களில் அறுவடைக்கு வரவிருந்த பாப்பாசி மற்றும் கொய்யா தோட்டம் என்பன முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளன.

விவசாயி ஒருவரின் பண்ணையில் பயிரிடப்பட்டிருந்த சுமார் 50 க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் முற்றாக வேரோடு சாய்ந்துள்ளன.

இதற்கு காரணம் கடந்த சில நாட்களாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மற்றும் சிவில் பாதுகாப்பு படையினரும் இணைந்து மேற்கோண்டு வரும் முறைசாரா யானை நடவடிக்கை மற்றும் பிற பிரதேசங்களில் இருந்து காட்டு யானைகளை வில்பத்து சரணாலயத்திற்கு கொண்டு செல்லும் நடவடிக்கை இடைநடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக அந்த காட்டு யானைகள் நாலாபுறமும் சிதறுண்டு கிராமங்கள் மற்றும் விவசாய நிலங்களையும் துவம்சம் செய்து வருகின்றன.

இதற்கு சம்பந்தப்பட்ட பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டும்.இல்லையேல் பிரதேச மக்கள் இணைந்து மாபெரும் கண்டன போராட்டத்தை நடத்துவோம் என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

## வருடாந்த பட்டமளிப்பு விழா



▪ **எம்.எஸ்.எம்.ஸாகிர்**

ஆறு வருட காலமாக கல்விச் சேவையில் பல வாய்ப்புகளை வழங்கிவரும் லேடி லய்ப் இன்ஸ்டிடியூட் எண்ட் ஸ்கில்ஸ் நிறுவனத்தில் கல்வி கற்ற டிப்ளோமோ மாணவர்களுக்கான பட்டமளிப்பு, சாதனையாளர்கள் கௌரவிப்பு மற்றும் விருது வழங்கல் விழா என்பன கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகர்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், அதன் பணிப்பாளர் சமீரா ரஸாக் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக, டெலன்ட் ஹப் நிறுவனத்தின் பணிப்பாளர் பஸ்லியா ரமீஸ், வைத்தியர். தரன்கினி, ஆர்.அஸ்வினாஷ் மற்றும் சமூக சேவையாளர் செல்வி. நுஹா ரிஸான் ஆகியோர் கலந்து கொண்ட துடன், இன்னும் பல அதிதிகள், மாணவர்கள் உட்பட பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 100 இற்கும் மேற்பட்டவர்களுக்கு பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், துறை சார்ந்தவர்களுக் கான விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## புத்தளத்தில் 2 நிமிட மௌன அஞ்சலி

சுனாமியினால் உயிர்நீர்த்தவர்களுக்கு புத்தளத்தில் 2 நிமிட மௌன அஞ்சலி மற்றும் ஆத்மா ஷாந்தி வேண்டி பிரார்த்தனை இடம்பெற்றது.

சுனாமி பேரழிவால் உயிரிழந்தவர்களை நினைவுகூரி நேற்று (26) காலை புத்தளம் மாவட்ட செயலகத்தில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வு புத்தளம் மாவட்ட அரசாங்க அதிபர் எச்.எம்.எஸ்.பி ஹேரத் தலைமையில் இடம்பெற்றதுடன் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட சர்வ மதத் தலைவர்கள், புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரிகள், முப்படையினர் கலந்து கொண்டனர்.

இதன்போது சுனாமி பேரழிவில் உயிரி ழுந்தவர்களுக்காக 2 நிமிட மௌன அஞ் சலி செலுத்தப்பட்டதுடன் ஆத்மா சாந்தி புத்தளம் மாவட்ட சர்வமதத் தலைவர்க ளினால் பிரார்த்தனையும் நிகழ்த்தப்பட்டது.

இதன்போது சர்வமதத் தலைவர்க ளுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது.

# உடப்பு திரௌபதியம்மன் ஆலய வருடாந்த மார்கழி பூஜை

▪ **க.மகாதேவன்**

வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த மார்கழி மாத(26) ஏகாதசி விரத சுவர்க்கவாயில் தரிசனப் பூஜை நடைபெற்றது.



பூஜையை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள் ஆரம்பித்து வைத்தார்.அத்துடன் இலங்கையில் ஆழிப்பேரலை இடம்பெற்று 20வருடம் நிறைவடைந்த நிலையில் விளக்கு ஏற்றுதல் நிகழ்வோடு, இதில் உயிர் நீத்த உறவுகளுக்கு விஷேட பூஜையும் இடம்பெற்றது. இதன் போது பக்தர்கள் பலர் இறைவனை வேண்டி வழிபட்டனர்.

## மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

▪ **எம்.ரி.ஆரிப்**

தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் 2024ஆம் ஆண்டு கற்கைநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு வடமத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாச தலைமையில் நடைபெற்றது.

இதில் பராமரிப்பு உதவியாளர்கள், பிரித்தெடுக்கும் உதவியாளர்கள், தொழில் துறை தையல் மற்றும் தொழிற் கல்வி கற்கை நெறிகளில் பயிற்றுவிக்கப்பட்ட 146 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதன் போது அநுராதபுரம் மாவட்ட மேலதிக செயலாளர் டபிள்யூ.எஸ்.பி . விக்கிரம ஆராச்சி, தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் எஸ் எஸ் . செனவிரத்ன, பணிப்பாளர் (தரம் மற்றும் மதிப்பீடு) வண்ண சுபசிங்க உதவி பணிப்பாளர் (பயிற்சி) எம்.எஸ்.பிரியந்த உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## வருடாந்த கலை, திறமைகள் வெளிப்பாட்டு நிகழ்வு

▪ **எம் எச் எம் சியாஜ்**

கற்பிட்டி ஜென்னத்துல் அஸாபீர் இஸ்லாமிய பாலர் பாடசாலையின் வருடாந்த கலை, திறமைகள் வெளிப்பாட்டு நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஜே. நிஸ்மத்துல் பாஹீமா தலைமையில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அதிதிகளாக கற்பிட்டி தில்லையூர் பாடசாலையின் அதிபர் எஸ்.எம்.அருஸ், கற்பிட்டி அல் ஹிரா ஆரம்ப பாடசாலையின் அதிபர் எம்.எம். எம்.நவ்ப் ஆகியோருடன் கற்பிட்டி நகரில் உள்ள ஏனைய பாலர் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

சிறார்களின் கலை, திறமைகள், ஆற்றல்கள் என பல்வேறு வகையிலும் தமது திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிக்கொணரும் நோக்கோடு சிறுவர்களின் ஆர்வத்தை தூண்டும் வண்ணம் கடந்த 12 வருடங்களாக கற்பிட்டி ஜென்னதுல் அஸாபீர் இஸ்லாமிய பாலர் பாடசாலை கலை, திறமைகளையும் வெளிப்பாட்டு நிகழ்வுகளையும் வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றது.

இந் நிகழ்வில் பங்குபற்றிய சகல மாணவர் சிறார்களுக்கும் பதக்கம் , சான்றிதழ் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கி கௌரவித்தமையும் சிறப்பம்சமாகும்.

# சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகள்

## கிண்ணியாவில் சர்வமத பிரார்த்தனைகள்




(கியாஸ் ஷாபி)

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று 20 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு, நேற்று (26) கிண்ணியாவில் பல இடங்களில் தேசிய பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிண்ணியா நகர சபை மற்றும் பிரதேச செய செயலகம் ஆகியனவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட, சுனாமி நினைவு தின பிரதான வைபவம் கிண்ணியா கடற்கரை பூங்காவில் இடம் பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம். எச். எம் கனி தலைமையில் நடைபெற்ற, இந்த நிகழ்வில், சுனாமி அனர்த்தத்தினால், உயிரிழந்தவர்களுக்கு காலை 9.25 மணி முதல் 02 நிமிடங்கள் மௌன செலுத்தப்பட்டது.

மேலும், கிண்ணியா பிரதேசத்தில் உயிரிழந்த 386 பேரின் ஈடேற்றத்துக்காக சர்வமத பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

இதனை கிண்ணியா ஜெம்மியதுல் உலமா சபையின் பிரதித் தலைவர் மௌலவி ஏ.ஜே. எம். ரியாஸ், ஆலங்கேணி மாரியம்மன் ஆலய பிரதம குரு தினேஷ்ராஜ் ஷர்மா ஆகியோர் இந்த பிரார்த்தனையை நடாத்தி வைத்தனர்.

## உயிரிழந்த உறவுகளுக்காக 2 நிமிடம் மௌன அஞ்சலி




(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக பிரதான தேசிய பாதுகாப்பு தின நிகழ்வு வியாழக்கிழமை (26) மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நினைவு கூரப்பட்டன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட செயலக தேசிய பாதுகாப்பு தின பிரதான நிகழ்வு புதிய மாவட்ட செயலகத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் எம்.சியாத் தலைமையில் இடம் பெற்றது. இதன் முதல் நிகழ்வாக மாவட்ட அரசாங்க அதிபர் தேசியக்கொடி ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன் தேசிய கீதமும் இசைக்கப் பட்டதன் பின்பு சுடர் ஏற்றி உயிரிழந்த உறவுகளுக்காக ஆத்மா சாந்தி வேண்டி 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டன.

பின்னர் சுனாமி அர்த்தம் சம்பந்தமான மும்மத தலைவர்களின் ஆத்ம சாந்தி நினைவு பேருரைகளும் இடம் பெற்றன. சுனாமி நினைவு ஞாபகார்த்த உரைகள் இங்கு நிகழ்த்தப்பட்டன.

இந்நிலையில் சுனாமி ஏற்பட்டு 20 ஆண்டுகள் நினைவு தின நிகழ்வுகள் இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இடம்பெற்றன. இதன்போது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷ ினி ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் எஸ்.பிரணவன் மதத் தலைவர்கள், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலுவலகத்தின் ஊழியர்கள், என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த சுனாமி அனர்த்தத்தினால் அதிகளவிலான உயிர் சேதங்களும் பொருட் சேதங்களும் ஏற்பட்டது மட்டக்களப்பு மாவட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மூதூர் இறங்குதுறையில் நினைவுத் தூபி





(ஏ.எச் ஹஸ்பர்)

20 ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு மூதூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்பில் பொதுமக்களின் பங்களிப்புடன் நேற்று (26) மூதூ ர் இறங்குதுறைமுக வாசலில் சுனாமி நினைவுத் தூபி திறந்து வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் 2004.12.26 ஆம் திகதி சுனாமி ஆழிப்பேரலையினால் மூதூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மரணித்த ஆத்மாக்களுக் கான நினைவஞ்சலியும் மற்றும் சமய அனுஷ்டானங்கள் இடம்பெற்றன. மேலும் இரத்ததான முகாம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி நினைவு தினத்தில் முதன்மை அழைப்பாளராக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து சிறப்பித்ததோடு மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன்.அனர்த்த முகாமைத்துவ உதவி பணிப்பாளர் கே.சுகுணதாஸ் ,சமூக நிறுவன உறுப்பினர்கள், சர்வமத தலைவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர்.

மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரகின் புத்தாக்கமான சமூகவியல் செயற்பாடுகள் உண்மையில் பாராட்டத்தக்கது. குறிப்பாக இலக்கியம், சமூக அபிவிருத்தி மற்றும் சகவாழ்வு தொடர்பாக மக்களை மையப்படுத்திய வேலைத்திட்டங்களை சமூக நிறுவனங்களின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தி அரச நிறுவனத்தினது சமூகம் சார்ந்த இயங்கியலை உறுதி செய்து வருகின்றார்.

## பாசிக்குடா கடற்கரையில் நினைவஞ்சலி





(ருத்ரா)

பாசிக்குடா கடற்கரையில் உள்ள நினைவுத் தூபியில் சுனாமி கடற்கோள் அனர்த்தத்தில் உயிரிழந்தோர்களுக்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தி ஈகைச் சுடர் ஏற்றி, உறவுகளினால் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. மும்மதங்களின் சர்வமதத் தலைவர்கள் கலந்து கொண்டு இரங்கல் உரை நிகழ்த்தினார்கள். பாசிக்குடா வலம்புரி விளையாட்டுக் கழகத்தினர் இவ் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தனர்.இதன்போது ஆழிப்பேரலை நினைவஞ்சலி பாடல்கள் அடங்கிய இருவட்டுக்கள் வெளியிடப்பட்டன. இவற்றினை கவிஞர்களான பாசியூர் மாரிதாசன் ஆதித்திய தயானந்த சர்மா ஆகியோர்கள் இயற்றியிருந்தனர்.

## 'நற்பிட்டிமுனைத் தமிழர் வரலாற்றுச் சால்புகள்' நூல் வெளியீட்டு விழா

(செல்லையா பேரின்பராசா)



பல்கலைக் கழக பதிவாளரும் இலக்கியவியலாளருமான நற்பிட்டிமுனையைச் சேர்ந்த சஞ்சீவி சிவகுமார் எழுதிய 'நற்பிட்டிமு னைத் தமிழர் வரலாற்றுச் சால்புகள்' எனும் வரலாற்று நூலின் வெளியீட்டு விழா நாளை 28 ஆம்திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற உள்ளது.

நற்பிட்டிமுனை கல்வி அபிவிருத்தி அமைப்பின் வெளியீடாக வெளிவரும் இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு அதன் தலைவர் க. ருத்திரமூர்த்தி ஆசிரியர் தலைமை தாங்குகிறார்.

இவ் விழாவின் முதன்மை அதிதியாக கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவலகள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் கலந்து கொள்கிறார். சிறப்பு அதிதிகளாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ், பிரபல எழுத்தாளர் தமிழ்மணி உமா வரதராஜன் மற்றும் வரலாற்று ஆய்வாளர் கலாநிதி கவிக்கோ வெல்லவூர்க் கோபால் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

கல்முனை மாநகரில் உள்ள நற்பிட்டிமுனை ஒரு பழம் பெரும் கிராமம். மன்னராட்சிக் காலத்தில் திக்கதிபர் தலமாகவும் இராசாக்கள் கூடுமிடமாகவும் விளங்கிய இடம். ஒல்லாந்தர் போர்த்துக்கீசர் காலத்தைத் தவிர்த்து துல்லியமான ஆதாரங்கள் கொண்ட ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தினை மட்டும் நோக்கினாலேயே நற்பிட்டிமுனை வன்னிமை கோத்திரத்தைச் சேர்ந்தவர்களே கரவாகுப்பற்றின் வன்னிமைகளாக பதவி வகித்துள்ளனர் என்பதுடன் இவர்களின் காலப்பகுதி நூற்றிப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## "திட்டங்களை முன்வைத்தால் மு.கா ஒத்துழைக்கும்"

(நாஸர்)

நாட்டிலுள்ள இன பாகுபாடின்றி சம அந்தஸ்த்துடன் அனைவரும் இலங்கையர் என்ற கோட்பாட்டில் மதிக்கப்படவேண்டும். எந்த விடயத்திலும் எந்த ஓர் இனத்திற்கும் விசேட அந்தஸ்த்து வழங்கக்கூடாது போன்ற திட்டங்களை உண்மையாகவே அரசாங்கம் முன்னெடுத்தால் அவ்வாறான திட்டங்களுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒத்துழைப்பினை வழங்கத் தயாராகவுள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம். நழீம் சாலி தெரிவித்துள்ளார் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம். நழீம் சாலியை வாழ்த்தி கௌரவிக்கும் விசேட நிகழ்வு ஏறாவூரில் நடைபெற்றது.

முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட தலைமைக் காரியால மான தாறுஸ் ஸலாமில் கட்சி ஒருங்கிணைப்பாளர் பிரவுஸ் றஷீட் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் பிரசன்னமாயிருந்தனர். இங்கு தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பி னர் எம். நழீம் சாலி அடுத்த வருடத்தில் நடாத்தப்படவுள்ளதாக உள்ளூராட்சி மன்றம் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்கு முஸ்லிம் சமூகம் எவ்வாறு முகம் கொடுக்கவேண்டும் என்பது பற்றியும் இங்கு ஆராயப்பட்டது. குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின்போது சம்மாந்துறையில் நீரில் மூழ்கி மரணமடைந்த மத்ரசா மாணவர்களுக்காக தலா பத்து இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படவேண்டுமென முஸ்லிம் காங்கிஸின் தலைவர் றவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

### கலண்டர் தொங்கவிடுவதற்காக

## வைத்தியசாலைக்குள் அத்துமீறிய இரண்டு இளைஞர்கள் கைது

(முகம்மட் முக்தார்)

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை பணிப்பாளரின் அனுமதியின்றி வைத்தியசாலைக்குள் 2025 ம் ஆண்டுக்கான அலுவலக நாட்காட்டிகளை கொழுவுவதற்கு உட்பிரவேசித்த இரு இளைஞர்கள் வைத்திய சாலை பிரதான காவலதிகாரியின் முறைப்பாட்டையடுத்து கல்முனை தலைமையக பொலிஸ ாரால் நேற்று முன்தினம் (23) கைது செய்யப்பட்டனர். இச்சம்பவம் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை வளாகத்தில் திங்கட்கிழமை (23) இடம்பெற்றுள்ளது. இதன்போது, குறித்த வைத்தியசாலையில் இருவர் அனுமதியின்றி உட்பிரவேசித்ததாக அங்கு பாதுகாப்புப் பணிக்குப் பொறுப்பான அதிகாரியினால் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் திங்கட்கிழமை (23) முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாட்டிற்கமைய குறித்த இருவரையும் கைது செய்த கல்முனை தலைமையக பொலிஸா ர் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், கைதானவர்கள் கல்முனை மாநகரிலுள்ள பிரபல ஆடையகத்தின் பணியாளர்கள் என்பதுடன், குறித்த வைத்தியசாலைப் பணிப்பாளரின் முன் அனுமதியின்றி சுத்தியலுடன் வைத்தியசாலைக்குள் பிரவேசித்து குறித்த வைத்தியசாலையில் சந்தேகத்திற்கிடமாக நடமாடி முரண்பாடான கருத்துக்களை வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் தெரிவித்துள்ளதாக விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

கைதானவர்கள் வழமை போன்று தாங்கள் புதிய ஆண்டிற்கான கலண்டர்களை அரச திணைக்களங்களுக்கு கொழுவிவிட்டு வரச் சென்றதாகவும் அதன் போது இவ்வாறான நிலைமை ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் குறித்த வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் உள்ளக விசாரணையொன்றினை மேற்கொண்டுள்ளதுடன், கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.டி.எம்.எல். புத்திகவின் அறிவுறுத்தலை

## உயிரிழந்த நிலையில் காட்டு யானை மீட்பு

(வெல்லாவெளி நிருபர்)



மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி வனஜீவராசிகள் சுற்றுவட்டாரக் காரியாலயப் பிரிவிற்குரிய திக்கோடையில் புதன்கிழமை (25) உள்ள வாய்க்கால் ஒன்றினுள் சுமார் 20-25 வயது மதிக்கதக்க ஆண் யானையொன்று உயிரிழந்த நிலையில் உள்ளதாகதாக வெல்லாவெளி வனஜீவராசிகள் சுற்றுவட்டாரக் காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிக நீண்ட காலமாகவிருந்து வெல்லாவெளி பிரதேச செயலக பிரிவில் காட்டுயானைகளின் அட்டகாசங்களும், தொல்லைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் அப்பகுதியில் இதுவரையில் காட்டு யானைப் பாதுகாப்பு வேலிகள் இன்மையால் யானை மனித மோதல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

எனினும் இவ்வாறு உயிரிழந்த யாட்டு யானையின் உடலை வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் பார்வையிட்டுள்ளதோடு யானையின் மரணம் தொடர்பிலும் விசாணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கல்முனையில் ஐஸுடன் கைது

(கே எ ஹமீட்)

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் புதன்கிழமை (25) கடற்கரை பள்ளி வீதி, கல்முனைக்குடி 02 பிரதேசத்தில் கல்முனை விசேட அதிரடி படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போதே ஐஸ் போதைப் பொருட்களை நீண்ட காலமாக சிறு பொதி செய்து வியாபாரம் செய்து வந்த சந்தேக நபரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்முனைக்குடி பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் ஒருவரையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 1 கிராம் 790 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.இதனையடுத்து, சந்தேக நபர்களை கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.மேலும், இந்த கைது நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அஸ்கிரிய ரஜமஹா விகாரையில் சுனாமி நினைவேந்தல்

எம்.ஏ.அமீனுல்லா

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 20 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு தேசியப் பாதுகாப்பு தினத்தை மையப்படுத்தி, கண்டி மாவட்ட நிகழ்வுகள் நேற்று (26) அஸ்கிரிய ரஜமஹா விகாரை வளாகத்தில் நடைபெற்றது.

அஸ்கிரி பீடத்தின் அனுநாயக்க, அஸ்கிரி விகாரையின் தலைவர் ஆகியோரால் பிரித் ஓதப்பட்டு, வணக்க வழிபாடுகள் நடைபெற்றன.

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் கண்டி மாவட்ட செயலக அதிகாரிகள் பங்கேற்புடன் இந்த வைபவம் நடைபெற்றது.

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அதன்பின், உணவு பிரசாதம் மற்றும் நினைவஞ்சலி பிரசாதம் வழங்கப்பட்டது.





பின்னர் உயிரிழந்தவர்களுக்கு நினைவாக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத் தப்பட்டது.

கண்டி மேலதிக மாவட்டச் செயலாளர் திருமதி நிலுகா புலத்கே, கண்டி மாவட்ட அனர்த்த நிலைய உதவிப் பணிப்பாளர்,இந்திக ரணவீர மற்றும் பலர் இந்நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

# மலையகத்திலும் சுனாமி நினைவஞ்சலி

க.கிஷாந்தன்

சுனாமி ஆழிப்பேரலை ஏற்பட்டு 20 ஆண்டு நிறைவை நினைவு கூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் மிகவும் துயர கரமான நிகழ்வாகக் காலை 9.25க்கு ஆழி பேரலை அனர்த்தம் இடம்பெற்றது.

இவ் அனர்த்தத்தில் உயிர்நீத்த இலங்கை உறவுகளுக்கு தமது அஞ்சலியை மலையக மக்களும் செலுத்தினர்.

ஹற்றன் பொலிஸார், நகர வர்த்தகர்கள் மற்றும் ஹற்றன் டிக்கோயா நகர சபையின் ஏற்பாட்டில் ஹற்றன் புத்தர் சிலைக்கு முன்னால் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் ஹற்றன் நகரில் உள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள், என அனைவரும் இதில் கலந்து கொண்டனர்.



# அரச கணக்காய்வு அலுவலகத்தில் ஆட்கள் பற்றாக்குறை

அரச கணக்காய்வு அலுவலகத்தில் சுமார் நூற்றுக்கு 50 சதவீத கணக்காய்வாளர்கள் இல்லாததால், கணக்காய்வு நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் இருக்க வேண்டிய கணக்காய்வாளர்களின் எண்ணிக்கை 1450 ஆகும்.

ஆனால் தற்போது எழுநூறு அதிகாரிகள் மாத்திரமே இருப்பதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பில் அரசாங்கத்தின் கணக்காய்வாளர் நாயகம் விக்கிரமரத்ன தெரிவித்ததாவது,

கணக்காய்வு உத்தியோகஸ்தர்களின் பாரிய பற்றாக்குறையைத் தாம் ஒப்புக்கொள்கின்றார்.

கணக்காய்வாளர் ஆட்சேர்ப்புக்காக நடத்தப்பட்ட பரீட்சையில் 460 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கான நேர்முகத்தேர்வு அடுத்த மாதம் 7 - 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். குழு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவுடன், ஆட்பற்றாக்குறை முடிவுக்கு வரும் என்று தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தலைவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.



கடந்த காலங்களில் பெருமளவிலான கணக்காய்வாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதாகவும் அதன் பின்னரே இந்த வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.கணக்காய்வு அதிகாரிகள் பற்றாக்குறையால் பல விசாரணைகளுக்கு அதிகாரிகளைப் பரிந்துரைப்பதில் கடும் சிக்கல்கள் ஏற்படுவதாக அதன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# போதைப் பொருட்களுடன் ஒருவர் கைது நுவரெலியா விசேட நிருபர்

நுவரெலியா ஹாவாஎலிய பகுதியில் சட்டவிரோத போதைப் பொருட்களுடன் நேற்று (26) ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் பொலிஸ் 34 வயதுடைய ஒருவர் மதன மோதகம் என்ற போதையுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து கஞ்சா கலவை செய்யப்பட்ட 300 மதனமோதக போதை குளிசைகள் பொதி செய்யப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக நடத்தி வந்த ஆயுர்வேத மருந்து விற்பனை நிலையம் ஒன்றில் குறித்த மதன மோதக போதை குளிசைகளை விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட தடுத்து வைக்கப்பட்டுள்ள நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட தன் பின்னர் நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# யாழில் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உப அலுவலக பொதுநூலகத்தின் ஏற்பாட்டில் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா இன்று (27) வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்குக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

வலி கிழக்கு பிரதேச சபை, உப அலுவலக பொறுப்பதிகாரி திருமதி. பத்மினி கிருபாகரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு, பிரதம விருந்தினராக எழுத்தாளர் " வடகோவை" வரதராஜன் கலந்துகொள்வதுடன், சிறப்பு விருந்தினர்களாக யா ஃ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் ஸ்ரீ. நிலோசகுமார் மற்றும் யா ஃ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி சிவரஞ்சினி கணேசானந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

# செப்புக் கம்பியை அறுத்தவர் மின்சாரம் தாக்கி மரணம்

அம்பாறை நகரின் தொழிற்பேட்டையில் உள்ள மின்சார சபைக்குச் சொந்தமான மின்மாற்றியின் செப்பு கம்பியை அறுக்கச் சென்ற நபர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று (26) அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மின்கம்பத்திலுள்ள செப்பு கம்பியை அறுத்த போது கம்பத்தில் மின் தாக்கி இறந்து தொங்கியிருந்த வரை , பொலிஸார் நகரில் மின்சாரத்தைத் துண்டித்து உடலைக் கீழே இறக்கியுள்ளனர்.

அம்பாறை நவகம்புர பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

அம்பாறை தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முப்பது தொன் எடையுடன் கவிழ்ந்த லொறி

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 30 தொன் டொலமைட் ஏற்றிச் சென்ற கனரக லொறி ஒன்று கஹதுடுவ வெளியேறும் வழிக்கு அருகில் 6 ஆவது மைல்கல்லுக்கு அருகில் பாதுகாப்பு வேலியில் மோதி சுமார் 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதாக தெற்கு அதிவேக வீதி போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.



50 கிலோ எடையுள்ள 600 மூடைகளைக் கொண்ட டோலமைட் ஏற்றிச் சென்ற லொறியே பள்ளத்தில் சரிந்துள்ளதாகவும் 3 சுற்று லொறி கவிழ்ந்தபோது லொறி சாரதி ஸ்டியரிங்கை பற்றிப் பிடித்திருந்த நிலையில் தப்பியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சாரதிக்குக் காயம் ஏதும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தளையில் இருந்து எல்பிட்டிக்கு டோலமைட் கொண்டு செல்லும் வழியிலேயே கஹதுடுவ நுழைவாயிலுக்கு அருகில், 30 அடி பள்ளத்தில் லொறி கவிழ்ந்துள்ளதாக தெற்கு நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹற்றன் பஸ் விபத்து; சாரதிக்கு விளக்க மறியல் நீடிப்பு

ஹற்றன் தனியார் பஸ் விபத்து தொடர்பில் சாரதிக்கு நேற்று விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஹற்றன் தனியார் பஸ் விபத்து சாரதியை ஹற்றன் நீதவான் நீதிமன்றில் வியாழக்கிழமை (26) மீண்டும் முன்னிலைப்படுத்திய போது, சந்தேகத்திற்குரிய சாரதியை 2025 ஜனவரி 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு ஹற்றன் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் நுவரெலியா மாவட்ட பிரதான மோட்டார் வாகனப் பரிசோதகரும் ஹற்றன் பொலிஸாரும் நீதிமன்றத்தில் நேற்று (26) விளக்கங்களை முன்வைத்து சந்தேக நபரின் விளக்க மறியலை நீடிக்குமாறு நீதவானிடம் கோரினர்.

பொலிஸாரின் விளக்கங்களைக் கருத்திற்கொண்ட நீதவான், சந்தேக நபரின் விளக்க மறியலை நீடித்து உத்தரவிட்டார்.

நாவலப்பிட்டி, நவ திஸ்பனையில் வசிக்கும் மூன்று பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய பிரசன்ன பண்டார என்பவருக்கே விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஹற்றனிலிருந்து கண்டி நோக்கிக் கடந்த 21ஆம் திகதி பயணித்த தனியார் பஸ், ஹற்றன் -கொழும்பு பிரதான வீதியில் மல்லியப்பு பகுதியில் வீதியை விட்டு விலகி 25 அடி பள்ளத்தில் பாய்ந்து தேயிலைத் தோட்டத்திற்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் மூவர் மரணமடைந்தனர். 51 பேர் காயமடைந்து, டிக்கோயா-கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஏட்டுப்பேர், கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# எரியுண்ட கெப் வண்டியில் சடலம் மீட்பு

ஹபரணை- பொலன்னறுவை வீதியில் எரியுண்ட கெப் வண்டியில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மின்னேரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஹபரணை–பொலன்னறுவை பிரதான வீதிக்கும் பதுஓயாவிற்கும் இடையில் 38 ஆவது மைல்கல்லுக்கு அருகில் எரிந்த கெப் வண்டியொன்றில் இருந்தே இச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மின்னேரிய பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



ஹபரணை மின்னேரிய வீதியில் பயணித்த நபர் ஒருவர், வாகனம் ஒன்று தீப்பிடித்து எரிவதாக மின்னேரிய பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து மின்னேரிய பொலிஸார் குறித்த கெப் எரிந்து கொண்டிருப்பதை கண்டுள்ளனர்.

புதன்கிழமை (25) இரவு 10 மணியளவில் தீ பரவியதாகவும், தீ பரவும் போது கெப் ஹபரணையை நோக்கி நிறுத்தப்பட்டிருந்ததாகவும், அதில் வேறு யாரும் இருக்கவில்லை எனவும் மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர். ஒருவரைக் கொன்று அவரது சடலத்தை கெப் வண்டியில் வைத்து தீ வைத்து எரிப்பதற்காகவே கெப் வண்டி இந்த பகுதிக்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். மின்னேரிய பொலிஸாரும் பொலன்னறுவை மாநகரசபையின் தீயணைப்பு அதிகாரிகளும் தீயை முழுமையாக அணைத்துள்ளனர். தீப்பிடித்த கெப் வண்டி, கொழும்பு பகுதியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானது என பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

# கௌதாரிமுனையில் மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படாது

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

பு.கஜிந்தன்

கௌதாரி முனையில் மண் அகழ்வுக்கு அனுமதி கொடுக்க வேண்டாம் என யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். நேற்று நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கௌதாரி முனை ஒரு முக்கியமான பிரதேசம். அந்த இடம் சம்பந்தமாக உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும். அதனை பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. எனவே அனுமதி கொடுக்கப்பட வேண்டாம் என்பது இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் தீர்மானம். இந்த முடிவுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்றார்.



# இரு செயற்கைக்கோள்களை

## அனுப்பத் தயாராகும் இஸ்ரோ



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) விண்வெளியில் செயற்கைக்கோள் மற்றும் விண்கலங்களை இணைக்கும் தொழில்நுட்பம் குறித்து ஆய்வு செய்வதற்காக "ஸ்பேடக்ஸ்" என்ற திட்டத்தின் கீழ் 2 செயற்கைக்கோளை வடிவமைத்துள்ளது.

இதனை ஆந்திரா மாநிலம் திருப்பதி மாவட்டம் ஸ்ரீஹரிகோட்டாவிலுள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 1ஆவது ஏவுதளத்தில் இருந்து வருகின்ற திங்கட்கிழமை (30) இரவு 9.58 மணிக்கு பி.எஸ்.எல்.வி. சி-60 ரொக்கெட் மூலம் விண்ணில் ஏவுகிறது.

இதற்கான பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிரமாக இறங்கி உள்ளனர். குறிப்பாக ரொக்கெட்டுக்கான எரிபொருள் நிரப்பும் பணி ஓரிரு நாட்களில் ஆரம்பிக்க இருக்கிறது. இதனை தொடர்ந்து இறுதிக்கட்டப்பணியான கவுண்ட்டவுன் வருகின்ற 29ம் திகதி நடைபெற வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொக்கெட் மற்றும் செயற்கைக்கோளின் செயல்பாடுகளை விஞ்ஞானிகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

"சேசர்" (எஸ்.டி.எக்ஸ்-01) மற்றும் "டார்கெட்" (எஸ்.டி.எக்ஸ்-02) என்ற இரண்டு செயற்கைகோள்களும் பெங்க்ரில் உள்ள இஸ்ரோவின் யு.ஆர். ராவ் செயற்கைக்கோள் மையத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த செயற்கைக்கோள்கள் ஒவ்வொன்றும் 220 கிலோ எடை கொண்டதாகும். பாடசாலை, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ரொக்கெட் ஏவுவதை நேரில் பார்வையிடுவதற்காக 10 ஆயிரம் பேர் அமரும் வகையில் பார்வையாளர்கள் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.




# ஆந்திராவில் 30 பேர் கைது



ஆந்திர பிரதேசத்தின் எலுரு நகரில் சூதாட்டத்தில் ஈடுபட்ட கும்பலை சேர்ந்த 30 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஆந்திர பிரதேசத்தில் எலுரு நகர்ப்புற பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட தங்கெல்லாமுடி பகுதியில் சிலர் கும்பலாக சட்டவிரோத சூதாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸார் படூரி நிலையம் என்ற பகுதியில் உள்ள கார் நிறுத்தும் இடத்திற்கு சென்று பார்த்த போது பலர் தப்பியோட முயற்சித்ததுடன் 30 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 8.10 இலட்சம் இந்திய ரூபாய் பணம் 25 தொலைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன. அவர்களின் குற்றப் பின்னணி குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் இதனை நடத்தியதாகக் கருதப்படும் பிரதான சந்தேக நபர்கள் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கின்றனர்.

# விருதுநகர் அகழாய்வில் 2000 தொல்பொருட்கள் கண்டெடுப்பு



விருதுநகர் மாவட்டம் வெம்பக் கோட்டை அருகே உள்ள விஜய கரிசல்குளத்தில் இதுவரை 16 குழிகள் தோண்டப்பட்டு அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. அவ் அகழாய்வில் 2000 இற்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண் டெடுக்கப்பட்டுள்ளன. தற்போது கூடுதலாக 2 குழிகள் தோண்டு வதற்கு அளவீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

அகழாய்வு பணிகளை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்ததுடன் அகழாய்வு குழிகளை சுற்றி பார்வையிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக அமைச்சர் தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பதிவில், விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை விஜயகரிசல் குளத்தில் நடைபெற்று வரும் மூன்றாம் கட்ட அகழாய்வுப் பணிகளைப் பார்வையிட்டேன். அகழாய்வில், இதுவரை 16 குழிகள் தோண்டப்பட்டுள்ள நிலையில், 2000 இற்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தற்போது சுடுமண்ணாலான சிவப்பு நிற வண்ணம் தீட்டப்பட்ட சிகை அலங்காரத்துடன் கூடிய மனிதனின் தலை கிடைத்துள்ளது. "கொடுமணம் பட்ட நன்கலம்" (பதிற்றுப்பத்து 67) சங்கப் புலவர் கபிலரின் வரிகளிலிருந்து, சங்கத் தமிழர்கள் அரிய கற்களால் ஆன அணிகலன்களை உற்பத்தி செய்து அணிந்தது தெரிய வருகின்றது.

அந்த வகையில், சூதுபவள மணிகள், மாவு கற்களால் செய்யப் பட்ட உருண்டை - நீள்வட்ட வடிவ மணிகள், அரிய வகை செவ்வந்திக் கல் மணிகள் கிடைத்துள்ளன. மேலும், சுடுமண்ணாலான பல வடிவமுடைய ஆட்டக் காய்கள், திமில் உள்ள காளையின் தலை முதல் முன்கால் பகுதி வரை கிடைத் துள்ளன. அவர்களின் அணிகலன், வடிவமைப்பு கலை, விளையாட்டு மீதான ஆர்வத்தை பறைசாற்று கிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தானியங்கி மெட்ரோ ரயில் திட்ட சோதனை ஆரம்பம்

சாரதி இல்லாத தானியங்கி மெட்ரோ ரயில் திட்டத்தின், சோதனை ஓட்டம் ஆரம்பிக்கப்பட்டது. விரைவில் ரயில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், 2ம் கட்ட திட்டத்தில் சாரதி இல்லாமல் இயக்கப்படும் தானியங்கி மெட்ரோ ரயில்களை பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்கென தலா 3 ரயில் பெட்டிகளை கொண்ட 70 மெட்ரோ ரயில்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கான ஒப்பந்தம் BEML நிறுவனத்திற்கு ரூ.3,657.53 கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

இதனையொட்டி, சாரதி இல்லாத ரயிலின் சோதனை ஓட்டத்தை மெட்ரோ ரயில் நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதற்கென மூன்று பெட்டிகள் கொண்ட சாரதி இல்லாத ரயில், அக்டோபர் மாதம் பூந்தமல்லி டெப்போவிற்கு தனித்தனியாக கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 118.9 கி.மீ., சென்னை மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்டத் திட்டத்திற்காக, பூந்தமல்லி மற்றும் போரூர் இடையேயான 4வது நடைபாதையில் இது இயக்கப்பட உள்ளது.

இது குறித்து மெட்ரோ நிர்வாக அதிகாரிகள் சாரதி இல்லாத தானியங்கி மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் ஆரம்பித்தது. ரயில் வேகம், மணிக்கு 10 கி.மீ., முதல் 40 கி.மீ., வரை இயக்கி சோதனை நடத்தப்படும். அதே நேரத்தில் 40 கி.மீ., முதல் 80 கி.மீ., வரை பூந்தமல்லியில் இருந்து போரூர் வரையிலான வழித்தடத்திலும் சோதனை மேற்கொள்ளப்படும். பிரேக்கிங் சிஸ்டமும் சோதிக்கப்படும். டிசம்பர் 2025 இற்குள் பூந்தமல்லி-போரூர் இடையே பயணிகள் சேவை ஆரம்பமாகும் என தெரிவித்துள்ளனர்.



# பஞ்சாப்பில் ட்ரோன் மூலம் போதைப் பொருட்கள் கடத்தல்



பஞ்சாப்பில் பொலிஸாருடன் இணைந்து எல்லை பாதுகாப்பு படை தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டது. இதில் டி.ஜே.ஐ. மேவிக் 3 கிளாசிக் ரக ட்ரோன் பறிமுதல் செய்யப்பட்டது.

எல்லை பாதுகாப்பு படை மற்றும் பஞ்சாப் பொலிஸார் கூட்டாக இணைந்து பஞ்சாப் மாநிலத்தின் எல்லைப் பகுதியில் ஊடுருவல் மற்றும் கடத்தல் முயற்சிகளை முறியடிக்கும் வகையில், தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், அமிர்தசரஸ் மாவட்டத்தில் உத்தர் தரிவால் கிராமத்தில் வயல்வெளி ஒன்றில் சீனாவில் தயாரிக்கப்பட்ட ட்ரோன் ஒன்று பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டது. அந்த மற்றொரு ட்ரோனிலிருந்து 460 கிராம் எடை கொண்ட ஹெராயின் போதை பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

இதேபோன்று, தார்ன் தரன் மாவட்டத்தில் கெம்கரண் கிராமத்தில் வயல்வெளி ஒன்றில் இருந்து டி.ஜே.ஐ. மேவிக் 3 கிளாசிக் ரக ட்ரோன் பறிமுதல் செய்யப்பட்டது. இதுதொடர்பாக எல்லை பாதுகாப்பு படை வெளியிட்ட அறிக்கையில், எல்லைப் பகுதியில் சட்டவிரோத ட்ரோன் ஊடுருவல் மற்றும் கடத்தல் முயற்சியானது முறியடிக்கப்பட்டது என தெரிவித்துள்ளது.

# உயர்மின் கோபுரம் இடிந்து விழுந்து மூவர் பலி

மத்திய பிரதேசத்தில் உயர்மின் கோபுரம் இடிந்து விழுந்ததில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர்.

மத்திய பிரதேசத்தின் சித்தி மாவட்டத்தில் 400 கிலோவோல்ட் உயர்மின் கோபுரம் இடிந்து விழுந்ததில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்தனர் மற்றும் 6 பேர் காயமடைந்தனர் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மாவட்டத்தின் ஆம்தாத் கிராமத்தில் மதியம் 12.30 மணியளவில் இந்த சம்பவம் நடந்ததாக அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த சம்பவம் குறித்து சித்தி காவல் கண்காணிப்பாளர், "தொழிலாளர்கள் பழைய உயர்மின் கோபுரங்களை புதியதாக மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந் தனர். அப்போது ஒரு உயர்மின் கோபுரம் திடீரென தொழிலாளர்கள் குழுவின் மீது இடிந்து விழுந்தது. இதில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் மற்றும் ஒருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார். மேலும் இந்த சம்பவத்தில் காயமடைந்த 6 பேரும் அருகில் உள்ள சஞ்சய் காந்தி மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்கள் மேற்கு வங்காள மாநிலத்தை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்" என தெரிவித்தார்.

# திருச்சி விமான நிலையத்தில் கடத்தல் தங்கம் பறிமுதல்

திருச்சி விமான நிலையத்தில் 15 இலட்சம் இந்திய ரூபாய் மதிப்பிலான கடத்தல் தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். திருச்சி விமான நிலையத்தில் வெளிநாடுகளில் இருந்து வரும் விமானங்களில் தங்கம் கடத்தி வரப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்ததையடுத்து விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, கோலாலம்பூரில் இருந்து திருச்சி வந்த விமான பயணிகளிடம் நடத்தப்பட்ட சோதனையில் ஒரு பயணியின் பையில் இருந்த சிலிண்டர் ரெகுலேட்டரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 194 கிராம் கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இந்த கடத்தல் தங்கத்தின் சர்வதேச மதிப்பு 15 இலட்சம் இந்திய ரூபாய் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நபரை சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## 'அண்ணா பல்கலை' மாணவி விவகாரம்

# எதிர்க்கட்சியினர் கைது




வள்ளுவர் கோட்டத்தில் அனுமதியின்றி போராட்டம் நடத்த முயன்றதால் முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், நூற்றுக்கும் மேற்பட்ட பா.ஜ.கவினரை பொலிஸார் கைது செய்தனர்.

அண்ணா பல்கலை மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதை கண்டித்து தமிழக பா.ஜ.கவினர் வள்ளுவர் கோட்டத்தில் அனுமதியின்றி போராட்டம் நடத்த முயன்றதால் முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், பா.ஜ.க மாநில துணைத்தலைவர் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பா.ஜ.க நிர்வாகிகளை பொலிஸார் கைது செய்தனர். இதுகுறித்து செய்தியாளர்களிடம் தமிழிசை சௌந்தரராஜன், தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருவதாகவும் இதனை கண்டித்து போராட்டம் நடத்த கூட அனுமதி மறுக்கப்படுவதாகவும், சட்டம் - ஒழுங்கு சீர்கெட்டு இருப்பதாகவும் குற்றஞ்சாட்டினார். இந்த பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டவர்களை கைது செய்ய வேண்டும். போராட்டத்தில் ஈடுபடுபவர்களை கைது செய்யக்கூடிய ஆர்வத்தை இதுபோன்ற குற்றங்களை நடைபெறுவதை தடுப்பதற்கு பொலிஸார் அக்கறை காட்டவில்லை எனவும் தெரிவித்தார்.

# ஜப்பான் விமான சேவை மீது சைபர் தாக்குதல்

ஜப்பான் விமான சேவையானது நேற்று (26) சைபர் தாக்குதலால் பாதிக்கப்பட்டதாக தெரிவித்தது. இதன் விளைவாக சில உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்களில் தாமதம் ஏற்பட்டதுடன், பயணச்சீட்டு விற்பனையும் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து எக்ஸ் சமூக வலைத்தளப் பதிவில், ஜப்பானிய விமான சேவை அதன் உள் மற்றும் வெளிப்புற அமைப்புகளில் காலை



7:24 மணிக்கு (உள்ளூர் நேரம்) ஒரு கணினி செயலிழப்பைப் எதிர்கொண்டது. இதனால் பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு மன்னிப்பு கோருவதாகவும் குறிப்பிட்டது. இதையடுத்து சுமார் அரை மணி நேரத்துக்கு பின்னர் ஜப்பான் விமான சேவை ஒரு புதுப்பிப்பை வெளியிட்டது.

அதில் காலை 8:56 மணிக்கு (உள்ளூர் நேரம்) பிரச்சினைக்கான காரணத்தை கண்டறிந்து நடவடிக்கை எடுத்ததாகக் தெரிவித்தது. அதேநேரம் நேற்று புறப்படும் உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்களுக்கான பயணச் சீட்டு விற்பனையை நிறுத்தியதாகவும் அது தெரிவித்தது. விமான நிலையத்தின் முக்கிய மையங்கள் டோக்கியோவின் நரிடா மற்றும் ஹனேடா விமான நிலையங்களிலும், ஒசாக்காவின் கன்சாய் மற்றும் இடாமி விமான நிலையங்களிலும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் தேசிய பறவையாக வழுக்கை கழுகு அறிவிப்பு

அமெரிக்காவின் தேசிய பறவையாக வழுக்கை கழுகு அறிவிக்கப்பட்டுள்ளது. வழுக்கை கழுகு (Bald Eagle) வட அமெரிக்காவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. தலைப்பகுதியில்



வெள்ளை நிறம் கொண்டுள்ள இந்த கழுகு அமெரிக்காவில் சக்தி மற்றும் வலிமையின் அடையாளமாக கருதப்படுகிறது.

அமெரிக்க வரலாற்றுடன் வழுக்கை கழுகுகளுக்கு 240 ஆண்டுகளுக்கு மேல் தொடர்பு உள்ளது. இதனையடுத்து, வழுக்கை கழுகை அமெரிக்காவின் தேசிய பறவையாக அறிவிக்க வேண்டுமென கோரிக்கை எழுந்து வந்தது. இந்நிலையில், வழுக்கை கழுகு அமெரிக்காவின் தேசிய பறவையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தென்கொரிய ஜனாதிபதியை தற்காலிக பதவி நீக்க நடவடிக்கை

தென் கொரியாவின் பிரதமரும் தற்காலிக ஜனாதிபதியுமான ஹான் டக்-சூவை (Han Duck-soo) பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானத்தை தென் கொரியாவின் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் வியாழக்கிழமை (26) தாக்கல் செய்துள்ளனர்.



நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியால் (DP) பரிந்துரைக்கப்பட்ட அரசியலமைப்பு நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க ஹான் டக்-சூ மறுத்ததை அடுத்து பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானத்தை அவர்கள் தாக்கல் செய்தனர். டிசம்பர் 3 அன்று குற்றம் சாட்டப்பட்டு, பதவி இடைநீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி யூன் சுக் இயோலின் இராணுவச் சட்ட முயற்சிக்கு ஹான் உதவியதாக எதிர்க்கட்சியும் குற்றம் சாட்டியுள்ளது.

ஹான் முன்னதாக அதைத் தடுக்கத் தவறியதற்காக மன்னிப்புக் கோரியிருந்தார். இந்த நிலையில் ஹான் டக்-சூவின் பதவி நீக்க தீர்மானம் அடுத்த 24 முதல் 72 மணி நேரத்தில் வாக்கெடுப்புக்கு விடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அது வெற்றிபெற 300 அமைச்சர்களில் 151 பேர் வாக்களிக்க வேண்டும். தற்போது நாடாளுமன்றத்தில் உள்ள 300 இடங்களில் 170 இடங்களை ஜனநாயகக் கட்சி கொண்டுள்ளது. எதிர்க்கட்சி கூட்டணி 192 இடங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ரஷ்யா மீது உக்ரேன் ஜனாதிபதி கண்டனம்

உக்ரேனின் அனல்மின் நிலையங்கள் உட்பட எரிசக்தி கட்டமைப்புகள் நிறைந்த கார்கீவ் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளைக் குறிவைத்து ரஷ்ய படையினர் புதன்கிழமை(25) தாக்குதல் நடாத்தினர். உலகம் முழுதும் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடும் தருணத்தில் உக்ரேன் மீது ரஷ்யா தாக்குதல் நடாத்தியது மனிதாபிமானமற்ற செயல் என உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கண்டனம் தெரிவித்தார்.

உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்து இரு ஆண்டுகளைக் கடந்துள்ளது. இருதரப்பிலும் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். உக்ரேனுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதியுதவி அளித்து வருகின்றன.

இதற்கிடையே, உக்ரேனின் அனல்மின் நிலையங்கள் உட்பட எரிசக்தி கட்டமைப்புகள் நிறைந்த கார்கீவ் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளைக் குறிவைத்து ரஷ்ய படையினர் புதன்கிழமை(25) தாக்குதல் நடாத்தினர். டிரோன்கள் எனும் ஆளில்லா விமானங்களால் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனல்மின் நிலையங்களை குறிவைத்து ரஷ்ய படை தாக்குதல் நடத்தியதால் ஏராளமான நகரங்கள் இருளில் மூழ்கின.

இதுதொடர்பாக, உக்ரேன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், உலகம் முழுதும் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடும் தருணத்தில் உக்ரேன் மீது ரஷ்யா தாக்குதல் நடாத்தி வருகிறது. உக்ரேனின் எரிசக்தி உட்கட்டமைப்புகள் நிறைந்த பகுதிகளைக் குறிவைத்து 70 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகள், 100 இற்கும் மேற்பட்ட டிரோன்கள் வாயிலாக தாக்குதலை ரஷ்யா தொடுத்துள்ளது. இதனைவிட மனிதாபிமானமற்ற செயல் இருக்க முடியுமா என பதிவிட்டுள்ளார்.

# ரஷ்யாவில் அவசரகாலநிலை பிரகடனம்

தெற்கு ரஷ்யாவின் க்ராஸ்னோடர் (Krasnodar) பகுதியில் உள்ள அதிகாரிகள், கருங்கடல் கடற்கரையில் எண்ணெய் கசிவை சுத்தம் செய்யும் முயற்சியாகபிராந்தியம் முழுவதும் அவசரகால நிலையை அறிவித்துள்ளனர். (full news in first comment) கடந்த டிசம்பர் 15 ஆம் திகதி கெர்ச் நீரிணையில் (Kerch Strait) புயலால் பாதிப்புக்குள்ளான இரண்டு ரஷ்ய எரிபொருள் கப்பல்களில் இருந்து 4,300 தொன் கனரக எரிபொருள் எண்ணெய் கருங்கடலில் கொட்டப்பட்டது. இந்த கசிவு சுமார் 55 கி.மீ கடற்கரையை மாசுபடுத்தியதாக அதிகாரிகள் தெரிவித்ததுடன், 34 கி.மீ கடற்கரையில் சுமார் 12,000 தொன் அசுத்தமான மண் அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.






# கனடா குடியுரிமை விதிமுறையில் மாற்றம்

கனடாவில் நிரந்தர குடியுரிமையினைப் பெறுவதற்கு எக்ஸ்பிரஸ் என்ட்ரி என்ற நடைமுறை உள்ளது. கனடா குடியுரிமை விதிமுறையில் நியமன கடிதத்துக்கான மதிப்பெண்கள், இனி கணக்கில் எடுத்துக் கொள்ளப்படாது என குடியுரிமை அமைச்சர் தெரிவித்துள்ளார். கனடாவில் ஏராளமான வெளிநாட்டவர்கள் பணியாற்றியும், மேற்படிப்பு படித்தும் வருகிறார்கள். அந்நாட்டில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கு எக்ஸ்பிரஸ் என்ட்ரி என்ற நடைமுறை உள்ளது. இதற்கு அதிகளவில் வெளிநாட்டவர்கள் விண்ணப்பிக்கிறார்கள். எக்ஸ்பிரஸ் என்ட்ரி முறையில் கனடா குடியுரிமை பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது, ஒவ்வொருவருக்கும் அவர்களது கல்வி, வேலை உள்ளிட்டவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும். அதிக மதிப்பெண் கள் பெறுபவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும். கனடாவில் வேலை பார்ப்பதற்கான




நிறுவனம் அளிக்கும் நியமன உத்தரவு கடிதத்துக்கு, 50 முதல் 200 புள்ளிகள் வரை கொடுக்கப்பட்டு வந்தது.இந்த நிலையில் கனடா குடியுரிமை விதிமுறையில் மாற்றம் செய்து அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

# அஸர்பைஜான் விமானத்தை ரஷ்யா சுட்டு வீழ்த்தியதா? தொடரும் சர்ச்சைகள்...

( ஆர்.மனோசங்கர்)

கசகஸ்தான் அருகே அஸர்பைஜான் ஏர்லைன்ஸ் விமானம் விபத்துக்குள்ளானது குறித்த ஆரம்ப விசாரணையில், பறவை மோதியதால் இந்த துரதிஷ்டவசமான சம்பவம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டது. எனினும், விபத்துக்குள்ளான விமானத்தின் மீது ரஷ்ய வான் பாதுகாப்பு ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் நிலையில், அது குறித்த விவாதங்களும் தற்போது சூடுபிடித்துள்ளன.

அஸர்பைஜானின் பாகுவிலிருந்து செச்சினியாவில் உள்ள ரஷ்ய நகரமான க்ரோஸ்னிக்கு புறப்பட்ட விமானத்தில் 67 பயணிகள் மற்றும் ஐந்து பணியாளர்கள் இருந்தனர். 42 அஸர்பைஜான் குடிமக்கள், 16 ரஷ்யர்கள், 06 கசகஸ்தான் மக்கள் மற்றும் 03 கிர்கிஸ் குடிமக்கள் உட்பட 67 பேர் விமானத்தில் பயணித்தனர். சமீபத்திய தகவலின்படி, விபத்தில் முப்பத்தெட்டு பேர் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து புதன்கிழமை (25) மேற்கு கசகஸ்தானில் உள்ள அக்டாவ் அருகே நடந்தது.

அவசர தரையிறக்கத்திற்கான அனுமதிக்காக காத்திருந்தபோது அஸர்பைஜான் ஏர்லைன்ஸின் எம்ப்ரேயர் EMB 190 விமானம் அக்டாவ் விமான நிலையத்தின் மீது வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவசர தரையிறக்கத்தின் போது விமானம் விபத்துக்குள்ளானதாகக் கூறப்படுகிறது. குறித்த விமானம் விபத்துக்குள்ளானபோது எடுக்கப்பட்டதாக கூறப்படும் காணொளிகள் சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளன.

இந்நிலையில், விமானத்தில் உள்ள சந்தேகத்திற்கிடமான துளைகள் விமானத்தை ரஷ்யர்கள் சுட்டு வீழ்த்தியிருக்கலாம் என்ற வதந்திகளுக்கு வழிவகுத்துள்ளன.இந்த துளைகள் “சிதைவு சேதத்தால்” ஏற்பட்டதாகத் தெரிகிறது என்று பலரும் கூறிவருகின்றனர். டிசம்பர் 25 அன்று காலை செச்சினியா மீது ட்ரோன்கள் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் பல தகவல்களுடன் வான் பாதுகாப்பு அமைப்புகளின் தாக்குதல் சாத்தியமான ஒன்று என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய ஒரு காணொளியில் விமானத்தின் உள்ளே இருந்த லைஃப் ஜாக்கெட்டுகளில் தோட்டா போன்ற துளைகள் இருந்தன. டெய்லி மெயில் அறிக்கையின்படி, விமானம் மிகவும் கடினமான ஏதோ ஒன்றின் மீது மோதியதாக கூறப்படுகின்றது. ஆரம்பத்தில், இது பறவைகளின் கூட்டத்தின் தாக்குதல் என்று நம்பப்பட்டது. ஆனால் பின்னர் அது ஒட்சிசன்



தொட்டியில் ஏற்பட்ட வெடிப்பு என்றும் கூறப்பட்டது. விமானத்தின் வால் பகுதியில் தரையிலிருந்து வான்வழி ஏவுகணை தாக்குதலின் பெரிய தடயங்கள் இருப்பதைக் காட்டுகின்றன என்று ரஷ்ய சுயாதீன ஊடக நிறுவனமான மெடுசா தெரிவித்துள்ளது. தரையிலிருந்து வான்வழி ஏவுகணைகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட இராணுவ மற்றும் சிவிலியன் விமானங்களின் ஏராளமான படங்கள் மற்றும் காணொளிகளில் உடற்பகுதியில் இதே போன்ற தோற்றமுடைய துளைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

ரஷ்யாவின் ஃபெடரல் ஏர் டிரான்ஸ்போர்ட் ஏஜென்சி (ரோசாவியாட்சியா) ஆரம்பத்தில் விமானம் பறவைக் கூட்டத்துடன் மோதியதாகக் கூறியது, இதனால் விமானி அவசரமாக தரையிறங்க முயன்ற போது விமானம் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஃப்ளைட் ரேடார் 24 இல் விமானத்தின் பாதையின்படி, விமானம் முதலில் தாகெஸ்தான் குடியரசின் மீது பறந்து கொண்டிருந்தது, அதன் பின்னர் விமானம் ரேடார் தொடர்பில் இருந்து மறைந்துவிட்டது.இது விமானம் ரஷ்ய வான் பாதுகாப்பு அமைப்பினால் தாக்கப்பட்டதை குறிக்கிறது என்று கூறப்படுகிறது.

இருப்பினும், ஒரு மணி நேரத்திற்குப் பிறகு விமானம் மீண்டும் ரேடாரின் இணைப்பில் வந்துள்ளது. மேலும் விபத்துக்குள்ளாவதற்கு முன்பு மேற்கு கசகஸ்தானின் மேல் பறந்து கொண்டிருந்தது.

இதற்கிடையில், விபத்துக்கு முந்தைய கடைசி தருணங்களின் காட்சிகளும் சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றன.விமானத்தில் இருந்த ஒரு பயணி, விபத்துக்கு முன்னும் பின்னும் நடந்த பயங்கரமான தருணங்களைப் படம் பிடித்தார், இது விமானத்திற்குள் நிலைமை எவ்வளவு குழப்பமாக இருந்தது என்பதைக் காட்டுகிறது.ரஷ்ய ஊடகமான RT பகிர்ந்து கொண்ட காட்சிகளில், ஒரு பயணி தலையில் இருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்ததையும், மற்றொரு பயணி விமானத்திலிருந்து வெளியேற முயன்றதையும் காண முடிந்தது. விபத்துக்கு முன் ஒரு நபர் பிரார்த்தனை செய்வதையும் காணொளி காட்டுகிறது.

இதேவேளை, விபத்து நடந்த இடத்திலிருந்து கருப்புப் பெட்டி மீட்கப்பட்டதாக அஸர்பைஜான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதன் பகுப்பாய்வு விபத்துக்கு வழிவகுத்த நிகழ்வுகள் குறித்த முக்கியமான நுண்ணறிவுகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Sports விளையாட்டு
oruvansports@gmail.com

# அவுஸ்திரேலிய இளம் வீரருடன் முட்டி மோதிய விராட் கோலி

அவுஸ்திரேலிய இளம் வீரர் சாம் கான்ஸ்டாஸூடன் இந்திய வீரர் விராட் கோலி முட்டி மோதிய சம்பவம் பெரிதாகியுள்ளது.

பார்டர் – காவஸ்கார் கிண்ண டெஸ்ட் தொடரின் 4–ஆவது போட்டி 'பாக்ஸிங் டே' டெஸ்ட்டின் முதல் நாளில் அவுஸ்திரேலிய ஆரம்ப ஆட்டக்காரராக இளம் வீரர் சாம் கொன்ஸ்டாஸ் களமிறங்கினார்.

அதிரடியாக விளையாடிய சாம் கான்ஸ்டாஸ் 60 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

10ஆவது ஓவர் முடிந்த பிறகு சாம் கான்ஸ்டாஸ் கிரீஸிலிருந்து அந்தப் பக்கம் நடந்து செல்லும்போது விராட் கோலி வேண்டுமென்றே அவரது பக்கம் வந்து தோள்பட்டையால் இடித்தார்.

பின்னர் இருவரும் ஏதோ பேச, நடுவரும் கவாஜாவும் வந்து சமாதானம் செய்தார்கள்.

கோலியின் இந்தப் போக்கைப் பலரும் கண்டித்து வருகிறார்கள். இப்போதுதான் முதல்முறையாக அறிமுகமாகியிருக்கும் வீரரிடம் கோலி இப்படி நடந்துகொள்வது ஏற்கத்தக்கதல்ல இந்திய ரசிகர்களே சமூக ஊடகங்களில் கருத்துக் கூறிவருகிறார்கள்.

இதனால் 3–4 வாரங்கள் விராட் கோலி தடைசெய்யப்படுவாரென கிரிக்கெட் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கான்ஸ்டாஸ் மீது வேண்டுமென்றே மோதிய விவகாரத்தில் விராட் கோலிக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 20% அபராதம் விதிக்கப்பட்டதுடன் 1 டிமெரிட் புள்ளி வழங்கப்பட்டது.

கிரிக்கெட் மைதானத்தில் ஒழுங்கீன செயல்களில் ஈடுபடும் வீரர்களை கண்டிக்கும் வகையில் டிமெரிட் புள்ளி வழங்கப்படுகிறது குறிப்பிடத்தக்கது.




அவுஸ்திரேலிய –இந்திய 4 ஆவது டெஸ்ட்

# அவுஸ்திரேலியா தோல்வியடைந்த வரலாறே கிடையாது.......

இந்தியா – அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான பாக்ஸிங் டே டெஸ்ட் போட்டியின் 4 ஆவது டெஸ்ட் மெல்போர்ன் மைதானத்தில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் கெப்டன் பேட் கம்மின்ஸ் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

இதன்பின் களமிறங்கிய சாம் கோன்ஸ்டாஸ் – உஸ்மான் கவாஜா கூட்டணி முதல் விக்கெட்டுக்கு 89 ஒட்டங்களைக் குவித்தது.

சிறப்பாக ஆடிய அறிமுக வீரர் கோன்ஸ்டாஸ் 60 ஒட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் லபுஷேன் – கவாஜா கூட்டணி இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தை உருவாக்கியது. 2வது விக்கெட்டுக்கு 65 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக அமைத்த நிலையில், கவாஜா 57 ஓட்டகள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து லபுஷேன் – ஸ்டீவ் ஸ்மித் கூட்டணி இணைந்தது.

நிதானமாக ஓட்டங்கள் சேர்த்த இவர்களை பிரிக்க முடியாமல் இந்தியப் பந்துவீச்சாளர்கள் திணறினர். இதன்பின் நீண்ட நேரத்திற்குப் பின் வாஷிங்டன் சுந்தர் பந்துவீச்சில் லபுஷேன் 72 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க, தொடர்ந்து வந்த அதிரடி வீரர் ட்ராவிஸ் ஹெட் டக் அவுட்டாகி அதிர்ச்சி கொடுத்தார். பின்னர் வந்த மிட்சல் மார்ஷ் 4 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ஸ்டீவ் ஸ்மித் – அலெக்ஸ் கேரி கூட்டணி இணைந்து கடைசி நேரத்தில் விரைவாக ஓட்டங்களைக் குவித்தது.

இதனால் அவுஸ்திரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கை 300யை கடந்த போது, இந்திய அணி புதிய பந்தை கையில் எடுத்தது. அதில் ஆகாஷ் தீப் வேகத்தில் அலெக்ஸ் கேரி 31 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் கம்மின்ஸ் – ஸ்டீவ் ஸ்மித் கூட்டணி மேலும் விக்கெட்டுகளை கொடுக்காமல் முதல் நாள் ஆட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

முதல் நாள் ஆட்டம் முடிவில் அவுஸ்திரேலியா அணி 86 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 311 ஓட்டங்களை எடுத்தது. ஸ்டீவ் ஸ்மித் 68 ஓட்டங்களுடன் களத்தில் இருக்கிறார். முதல் நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணியின் கைகள் ஓங்கியிருந்த போது, பும்ராவின் அபார பந்துவீச்சில் 9 ஓட்டங்களில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். .



# அகில இலங்கை வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## 30ஆவது தடவையாக EVA அனுசரணை




மேல் மாகாண வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் 30ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அகில இலங்கை EVA வலைப்பந்தாட்டப் போட்டி ஜனவரி 11ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் இலங்கை விமானப்படை மைதானத்தில் நடைபெறவுள்ளது. போட்டிக்கான விண்ணப்பங்கள் ஜனவரி 6 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

நாட்டின் வலைப்பந்தாட்ட கலண்டரில் சிறந்து விளங்கும் அகில இலங்கை வலைப்பந்தாட்டப் போட்டிகள் 4 பிரிவுகளாக நடைபெறவுள்ளன. பெண்கள் மற்றும் ஆண்கள் திறந்த போட்டிகள் “யு“ பிரிவிலும், “பி“ பிரிவில் பெண்களுக்கான திறந்த போட்டி உள்ளடக்கப்பட்டுள்ளது.

“சி“ பிரிவில் 40 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட வீராங்கனைகளுக்கான போட்டிகள் மற்றும் 15 வயதுக்குட்பட்ட, 17 வயதுக்குட்பட்ட மற்றும் 19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவிகளுக்கான போட்டிகள் பிரிவு “டி“.வில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ள இப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்கள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன், போட்டியின் சம்பியன் மற்றும் ரன்னர்ஸ் அப் அணிகளுக்கு வெற்றிக்கிண்ணங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக நெட்போல் குயின் மற்றும் நெட்போல் கிங் ஆகியோரும் தெரிவு செய்யப்படவுள்ளதுடன், அவர்களுக்குப் பெறுமதியான பரிசில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண வலைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவி திருமதி கேரில் ரோசர் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

# இலங்கை தடகள சங்கத்தின் முன்னாள் உப தலைவருக்கு நான்கு ஆண்டுகள் தடை

இலங்கை தடகள சங்கத்தின் முன்னாள் உபதலைவர் எச்.டபிள்யூ. நிமலசிறிக்கு நான்கு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிர்வாகத்தின் உபதலைவர் ஜி.எல்.எஸ்.பெரேராவின் கழுத்தை நெரித்த குற்றச்சாட்டின் பேரில் இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி உபாலி சமரவீர, முன்னாள் விளையாட்டுப் பணிப்பாளர் பத்மா சிறிவர்தன, தடகள சங்கத்தின் உபதலைவர் சந்தன ஏக்கநாயக்க ஆகியோர் அடங்கிய குழு மேற்கொண்ட விசாரணையில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குழுவின் அறிக்கையை இலங்கை தடகள சங்கத்திடம் வழங்கியதன் பின்னர், நேற்று முன்தினம் கூடிய தடகள செயற்குழு இந்த தடையை விதித்துள்ளது.

இலங்கையில் நடைபெறும் தடகளப் போட்டிகளில் நடுவர் மற்றும் போட்டி ஏற்பாடுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் தடகளச் சங்கத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனத் தடகள நிர்வாக சபையின் அங்கீகாரத்துடன் உபதலைவர் ஜி.எல்.எஸ்.பெரேரா தெரிவித்திருந்தார்.

தடகள சங்கத்தின் முன்னாள் உபதலைவர் எச். டபிள்யூ. நிமலசிறி மேற் சொன்ன கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து,பெரேராவுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு மோதலில் ஈடுபட்டது.

மூவரடங்கிய குழு ஆதாரங்களுடன் கண்டறிந்துள்ளது.இவற்றைக் கருத்தில் கொண்டே அவருக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# அம்மாவே என்னை சுழல் பந்து வீச்சாளராக்கினார் அஸ்வின் நேர்காணலில் தெரிவிப்பு



தான் ஒரு சுழல் பந்து வீச்சாளராக வளர்வதற்கு முக்கிய பங்காற்றியவர் எனது அம்மாதான் என ஓய்வை அறிவித்த பிறகு அஸ்வின் யூடியூப் நேர்காணல் ஒன்றில் பேசியுள்ளார்.

நானும் அப்பாவும் உழைக்க அம்மாதான் மூலக் காரணம். அவர் பெட்ரோல் மாதிரி. அவர் இல்லையென்றால் எங்களால் இவ்வளவு ஓடியிருக்க முடியாது. ஒருநாள் எனது போட்டியைப் பார்க்க வந்தார். நான் குறைவான ஓட்டங்களில் ஆட்டமிழந்தேன். அப்போது அம்மா, “என்னடா சும்மாவே இருக்க?” எனக் கேட்டார். “அவுட் ஆயிட்டேன் என்ன பண்றது?” என்றேன். அதற்கு அம்மா, “போலிங் போடு” என்றார். நான் “பாஸ்ட் பேலிங் வராது” என்றேன். அதற்கு அம்மா, “சரி ஸ்பின் போடு” என்றார். அப்போது தொடங்கியதுதான் எனது சுழல் பந்துவீச்சுப் பயணம்.

பிறகு இன்னுமொரு முறை என்னால் சரியாக விளையாட முடியவில்லை, உங்களை ஏமாற்றிவிட்டேன் என அம்மாவின் மடியில் படுத்து அழுதேன். அப்போது அம்மா உன்னால் முடிந்தவரை முயற்சி செய். நான் உனக்காக பணம் சேமித்து வைக்கிறேன் எனக் கூறினார். எனது அம்மாவும் அப்பாவும் எனக்காக தியாகம் செய்தார்கள். அவர்கள் இல்லையென்றால் நான் இல்லை என அஸ்வின் கூறியுள்ளார்.

# பொதுநலவாய கராத்தே போட்டியில் தங்கப் பதக்கம்

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 11ஆவது பொதுநலவாய நாடுகளுக்கான கராத்தே போட்டியில், 70 கிலோ எடைப் பிரிவில் (ஆண்கள்) இலங்கை வீரர் அனுக்க கருணாநாயக்க தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

இதற்கு முன்னர் பூட்டானில் நடைபெற்ற சர்வதேச கராத்தே போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற அனுக்கவின் தந்தை ஊவா மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தினேஷ் கருணாநாயக்க ஆவார்.



இந்தப் பத்திரிகை கொழும்பு – 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 27ம் திகதி வெள்ளிக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.